


★ உலகிலேயே நீண்ட நேரம் ஓடிய படம், தூக்கமின்மைக்கு நிவாரணம் ('கியூர் ஆப் இன்சோம்னியா') என்கிற ஆங்கிலப் படம். இது ஒட்டுமொத்தமாக 5 ஆயிரத்து 220 நிமிடங்கள், அதாவது 87 மணிநேரம் ஓடி 'கின்னஸ்' சாதனை படைத்தது.

★ உலகிலேயே மிகப் பெரிய டிஸ்கோ நடன நிகழ்ச்சி நியூயார்க் நகரில் நடந்தது. இதில் 13 ஆயிரம் பேர் பங்கேற்று நடனமாடியது சாதனை.

★ வெனிசூலா நாட்டில் உள்ள ஏஞ்சல்ஸ் அருவிதான், உலகிலேயே மிகவும் உயரமான அருவி. இதன் உயரம் எவ்வளவு தெரியுமா? 979 மீட்டர். அதாவது, நயாகராவைப் போல 19 மடங்குகள் உயரமானது.

★ மனிதன் வாழ்நாளில் சுமார் 60 ஆயிரம் பவுண்டு (ஒரு பவுண்டு 450 கிராம்) உணவுகளை சாப்பிடுகிறான்.

★ வளரும் நாடுகளில் சுமார் 27 சதம் உணவுகள் வீணடிக்கப்படுகின்றன.

★ பள்ளிக்குழந்தைகளின் சராசரி வருகைப் பதிவு, ஆண்டுக்கு 200 நாட்கள். ஆனால் ஜப்பானில் அதிகபட்சமாக 243 நாட்களும், சுவிட்சர்லாந்தில் குறைந்தபட்சமாக 170 நாட்களும் பதிவாகிறது.

★ உலகம் முழுவதிலும் 2 ஆயிரத்து 700 மொழிகள் நடைமுறையில் உள்ளன.

★ நயாகரா அருவியின் ஓரத்தில் மட்டும் விநாடிக்கு 280 கோடி லிட்டர் தண்ணீர் விழுகிறது.

*–எம். சம்பத்குமார், புதுடெல்லி.*






**1**

**புத்தியை மீறி உழலும் சக்தி மனதுக்கு இருக்கிறது.**

**–பாரதியார்.**

தும்மல் தூக்கத்தை கலைத்துப்போட்டது. அந்தச் சத்தம் அறைச் சுவர்களில் மோதி பிரதிபலித்தது. தும்மல் தந்த அதிர்ச்சியில் விழித்துக்கொண்டான், மதி. அவன் மட்டுமல்ல, அவனுக்குள் இருந்த மிருகமும் விழித்துக்கொண்டது. அந்த மிருகம் கவலையுடன் தலைதூக்கிப் பார்த்தது. அந்த மிருகத்துக்கு உணவு தேவையாயிருந்தது. ஆனால் உணவு

க்கப்பட்டுவிட்டது. இருபது வயது மதி கண்களால் அறையை தடவிப் பார்த்தான்.

அந்த அறை இருட்டின் பிடியில் சிக்கி இருந்தது.

இருட்டு பயமுறுத்திற்று.

சுவாசத்தை ஆழமாய் உள்வாங்கினான்.

மார்பு கூட்டுக்குள் குளிர் எட்டிப்பார்த்தது.

எழுந்து அமர்ந்தான்.

அவனுக்குள் இருந்த மிருகம் மீண்டும் சோர்வாய் படுத்துக்கொண்டது.

போர்வையை உதறிவிட்டு படுக்கையிலிருந்து இறங்கினான். கண்ணுக்கு நேர்எதிரில் அந்த ஜன்னல் தெரிந்தது.

ஒற்றை ஜன்னல், மூடப்பட்ட ஒற்றை ஜன்னல்.

முடுக்கிவிடப்பட்ட பொம்மைபோல ஜன்னலை நோக்கி நடந்தான். ஐந்தடி தூரத்தை கடக்க ஐம்பது விநாடிகள் தேவைப்பட்டது.

ஜன்னலை நெருங்கிவிட்டான்.

இருந்தும் ஜன்னலை திறக்க பயமாயிருந்தது.

பயத்துக்கு காரணம்–

ஜன்னலோரத்தில் காத்துக்கிடக்குமோ காதல் என்று.

தயக்கத்துடன் ஜன்னலை திறந்தான்.

அங்கேயும் இருட்டே வியாபித்திருந்தது.

'இருட்டு.. இருட்டு.. எங்கும் இருட்டுதானா...?'

மார்கழி மாதத்து குளிர் காற்று முகத்தில் மோதியது.

வானத்தில் நிலவை தேடின கண்கள்.

நிலவை காணவில்லை.

ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் மட்டும் கண்சிமிட்டின சோகமாய்.

மழை மேகத்துக்குள் விழுந்து கிடந்தது தங்க நிலவு.

'நானும் விழுந்து கிடக்கிறேன், பாதை மாறி போதைக்குள்– என்னுள் இருக்கும் மிருகத்துக்கு தினமும் ஆறு வேளை உணவு



வேண்டும். உணவாய் மிருகத்துக்கு போதை தேவைப்படுகிறது. அந்த மிருகம் என் கல்லூரி படிப்பை தின்றுவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாய் என்னையும் மென்றுகொண்டிருக்கிறது. இன்னும் என்னோடு இருக்கிற யாரையெல்லாம் தின்று தீர்க்கப்போகிறதோ...

ம்... தினமும் என் ரத்தம் ருசிக்கிற இந்த மிருகத்தை என்னுள் கொண்டுவந்து விதைத்தது எது? என் வலது கண்ணை இந்த மிருகம் தின்ன– இடது கண்ணை காதல் தின்னுகிறதே... காதல் மூன்றெழுத்து வார்த்தை... காதல் எது... காதல் எது– –மனதுக்குள் ஓடியது வார்த்தைகள் வண்ணத்து பூச்சியாய்.

இரக்கமில்லாமல் பிடித்து பிடித்து கொன்றான்.

காலடியில் வீசி மிதித்தான்.

அடுத்த இமை மூடு பொழுதே–

மீண்டும் மீண்டும் பறந்தன வார்த்தைகள் வண்ணத்துப் பூச்சியாய்.

காதல் எது... எது என்று கேள்வி கேட்டு இதயம் குடைந்தது.

வாய் அனிச்சை செயலாய் இருமுறை முணுமுணுத்தது.

"காதல் எது என சொல்... காதல் எது என சொல்..." –என்றோ எங்கோ படித்தது நினைவில் வந்து இதயத்தில் மோதியது.

**'ரத்த சுவை என்று சொல்.**<br>
**சித்திரவதை என்று சொல்.**<br>
**காலையில் எழும்போதே காத்துக்கிடக்கும் ஓநாய் என்று சொல்.**<br>
**விளக்கு இல்லாத ராத்திரியில்-**<br>
**கொட்டின தேள் என்று சொல்.**<br>
**ரயில் ஏறி செத்துப்போன அவளின்-**<br>
**கழுத்தில் கிடந்த சேதமில்லா மல்லிகையென்று சொல்.**

......... ......... .........

**காதலைக் காதலென்றும் சொல்லலாம்...'**

–வரி வரியாய் இதயத் திரையில் சத்தமில்லாமல் ஓடிய

...ர்த்தைகள்– சுசப்பாய் நின்றது மதியின் தொண்டைக் குழியில்.

சுவாசக் காற்றே நுரையீரலை அழுத்துவதுபோல் உணர்ந்தான்.

காதல் குறித்து சிந்திக்காதே என்றது அறிவு. ஆனால், மனதோ சேற்றில் புரளும் பன்றியாய்...

'காதல் குறித்து எங்கே படித்தேன்...யார்...யார் எழுத்து இது... எவருடைய வேதனை... வலியின் வேதனையா...? அந்த வேதனையின் வெளிப்பாடா இந்த வார்த்தைகள்...?"

–மதி ஞாபக அடுக்குகளில் தடவி தடவிப் பார்த்தான். இரண்டெழுத்து தட்டுப்பட்டது.

'பூமா... பூமாவின் அனுபவமா இந்த எழுத்து... ரத்த ருசியா காதல்... சித்திரவதையா காதல்... காதல் ஒருவகை மரணமா... காதல் என்னை... உயிரோடு என்னை கொன்று போட்டுவிட்டதா?'

–சிகரெட் ஒன்றை எடுத்து வாயில் பொருத்தினான்.

"காதலைக் காதலென்றும் சொல்லலாம்... ம்... காதலை சாதலென்றும் சொல்லலாம்... காதல் சாதல்தான் . என்னை பொறுத்தவரையில் 'காதல் சாதல்தான். இனி காதல்...' –தீக்குச்சியை எடுத்து, அதன் தலையை நெருப்பு பெட்டியில் உரச, தீக்குச்சி எரிந்தது.

அடுத்த விநாடி சிகரெட்டுக்கு கூடுவிட்டு கூடு பாய்ந்திருந்தது நெருப்பு.

புகை காற்றில் அலைக்கழிந்தது.

யாரோ இருட்டிலிருந்து தன்னைப் பார்த்து சிரிப்பது போலிருந்தது.

இருட்டை உற்றுப் பார்த்தான்.

யாரும் இல்லை.

மீண்டும் சிரிப்பு சத்தம் கேட்டது.

இம்முறை காதருகில்!

மனதுக்குள் பயம் எட்டிப் பார்த்தது.

அவசரமாய் ஜன்னலை பூட்டினான்.



வேகமாய் நடந்து விளக்குக்கு மின்சாரம் கொடுத்தான்.

அறையெங்கும் வெளிச்சம் பரவியது.

வார இதழ்கள் இரைந்து கிடந்தன. ஆடை ஒன்று சுருண்டுக் கிடந்தது. தரையில் தாறுமாறாய் கிடந்தது போர்வை.

அறையின் மூலையில் தலை உடைந்த கண்ணாடி குப்பிகள்... பஞ்சு துணுக்குகள்... ஸிரிஞ்ச்... சுருட்டி எறியப்பட்ட காகிதம்...

குனிந்து படுக்கைக்கு அடியில் எதையோ தேடினான்.

உள்ளே இருந்து சூட்கேஸ் ஒன்றை எடுத்து படுக்கைக்கு மேல் வைத்தான்.

நிதானமாய் திறந்தான்.

மடிப்பு கலையாமல் அடுக்கி வைக்கப்பட்ட ஆடைகள்.

தன்னை ஒருமுறை பார்த்துக்கொண்டான்.

கசங்கிப்போன சட்டை... அழுக்கேறிய ஜீன்ஸ்...

மீண்டும் பார்வை பெட்டிக்கு தாவியது.

அடுக்கி வைத்திருந்த துணிகளின் முதுகில் 'உறை' ஒன்று இருந்தது.

ரோஜா வண்ண உறை.

அந்த உறையை கையில் எடுத்து– அதன் வயிற்றுக்குள் இருந்து ஏதோ உருவினான்.

அது– காகிதம்.

மடிக்கப்பட்ட காகிதம்.

காகிதத்தின் உறக்கம் கலைத்தான்.

நீல எழுத்துகள் காதல் சொன்னது.

என்னுயிரே மதி... என்று காதல் கசிய அழைத்தது.

"ட்டய்ங்... ட்டய்ங்... ட்டய்ங்..." –சுவர்க்கடிகாரம் பன்னிரண்டுமுறை அடித்து, நள்ளிரவு பன்னிரண்டு மணி என்றது.

கண்களை திருப்பி சுவர்க்கடிகாரம் பார்த்தான்.

சிறிய முள்ளை அசையவிடாமல் பெரிய முள் இறுக்கிப் பிடித்துக்கொண்டிருப்பது போலிருந்தது.

இரண்டு, மூன்று ஆடைகளை எடுத்து படுக்கையில் வீசினான்.

கையிலிருந்த காகிதத்தை உறைக்குள் திணித்தான்.

உறையை உள்ளே வீசி, சட்டென்று சூட்கேஸை மூடி படுக்கைக்கு அடியில் தள்ளினான்.

எழுந்து சட்டையை கழற்றி எறிந்தான். அணிந்திருந்த பேண்ட்டை உதறினான். மடிப்பு கலையாத ஜீன்ஸ் பேண்ட்- முழுக்கை பனியன் அணிந்தான்.

அதற்குமேல் கோட் அமைப்பில் ஆடையொன்று அணிந்துகொண்டான்.

தலையணையை புரட்டினான்.

மினுமினுப்பாய் கத்தி ஒன்று எட்டிப் பார்த்தது.

எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டான்.

அடுத்த ஐம்பதாவது நிமிடத்தின் ஆரம்பத்தில்–

அந்த சிறிய வீட்டின் முன்னால் நின்றுகொண்டிருந்தான் மதி.

ஒரே ஒரு மாடி அறையைக்கொண்ட வீடு.

அந்த ப்ரதேசம் இருளின் பிடியில் சிக்கியிருந்தது.

வீடு மவுனத்தின் பிடியில்...

கேட் பூட்டிக் கிடந்தது.

காம்பவுண்டுசுவர் தலையில் கண்ணாடி துண்டுகள் கிரீடமாய்.

சிறிய பலகையொன்று ஓய்வுபெற்ற ஆசிரியர் 'சதாசிவம் வீடு' என்றது.

சுவர் ஏறி உள்ளே குதித்தான்.

குரைத்தபடி ஓடிவந்தது கறுப்பு நாய் ஒன்று.

வந்த வேகத்தில் சட்டென்று நின்றது.



வாலாட்டியது வேகமாய்.

அதன் தலையைத் தடவிக் கொடுத்தான் பாசமாய்.

திரும்பி வாசலை ஒருமுறை பார்த்துவிட்டு, வீட்டின் பின்பக்கத்தை நோக்கி நடந்தான்.

பின்னால் ஓடியது கறுப்பு நாய். காலடியில் முனகின இறந்துபோன இலைகள்.

வீட்டில் பின்னால் கொய்யா மரம் ஒன்று நின்றது.

சரசரவென்று மரத்தில் ஏறி, மாடி ஜன்னலுக்கு தாவினான்.

அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தது நாய் மவுனமாய்.

அடுத்த நிமிடம் அறைக்குள் குதித்திருந்தான்.

அந்த அறையில் நீலவிளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

மெலிதான விளக்கொளியில்– சுவரிலிருந்த சுவாமி விவேகானந்தர் பார்த்துக்கொண்டிருந்தார் அமைதியாய்.

மாடிப்படிகளில் இறங்கி கீழே வந்தான்.

குறட்டைச் சத்தம் கேட்டது.

எட்டிப் பார்த்தான்.

சதாசிவம் சுருண்டு கோழிக்குஞ்சாய் படுத்திருந்தார். மதியின் கால்கள் நடுங்கின.

கடைசி படியில் அசைவற்று நின்றான்.

சில நிமிடங்கள் அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை.

தயக்கத்தை உதறிவிட்டு அடுத்த அறையை நோக்கி நடந்தான்.

கதவு பூட்டிக்கிடந்தது.

தொட்டான்.

சத்தமில்லாமல் திறந்துகொண்டது.

அந்த அறையில் வெளிச்சம் இருந்தது.

முருகன் படத்துக்கு முன்னால் தூங்காவிளக்கு ஒன்று எரிந்து

டிருந்தது.

வேறு யாரும் இல்லை. அறையின் மூலையில்–

கண்ணாடி பொருத்திய ஆள் உயர பீரோ ஒன்று இருந்தது.

முருகன் படத்துக்கு முன்னால் போய் நின்றான் மதி.

குழந்தை முகம் மாறாமல் புன்னகைத்தார்.

முன்னாலிருந்த அகல் விளக்கு காற்றுக்கு தலை ஆட்டியது.

அருகில் சிவப்பு மண் உண்டியல்.

'உடைத்துவிடலாமா?' என்று யோசித்தான்.

'வேண்டாம்' என்று முடிவெடுத்தான்.

முருகன் படத்தை தூக்கினான்.

பின்னால் கொத்துச்சாவி தூங்கிக்கொண்டிருந்தது.

தயக்கத்துடன் கையில் எடுத்தான். விரல்கள் நடுங்கின.

சாவிகள் தூக்கம் கலைந்து சப்தமிட்டது.

அவசரமாய் சாவிகள் முத்தமிடுவதை தடுத்து சப்தத்தை நிறுத்தினான்.

கவனம் சிதறாமல் கொத்துச்சாவியுடன் பீரோவை நோக்கி நடந்தான்.

திடீர் சந்தேகம் வந்தவனாய் திரும்பி ஹாலுக்கு வந்து எட்டிப் பார்த்தான், மதி.

சதாசிவம் குறட்டைவிட்டு தூங்கிக்கொண்டிருந்தார், அமைதியாய்.

மீண்டும் பூனைபோல் நடந்து அறைக்குள் வந்தான்.

கதவை சத்தம் வராமல் கவனமாய் சாத்தினான்.

இடுப்புக்கத்தியைஒருமுறைதொட்டுப்பார்த்துக்கொண்டான்.

நிம்மதி பெருமூச்சொன்று மார்பை தாலாட்டியது.

படமாக இருந்த முருகன் அவனையே உற்றுப் பார்த்து புன்னகைப்பது போலிருந்தது.



தலை உதறி நடந்தவன் நின்றான்.

யாரோ முதுகை...

அவசரமாய் திரும்பி முருகன் படத்தை கையிலெடுத்து சுவர் பார்க்கும்படி வைத்தான்.

திருப்தி அடைந்தவனாய் பீரோவை நோக்கி நடந்தான், கொத்துச் சாவியுடன்.

பீரோவை நெருங்கியதும், கண்ணாடியில் மதியின் உருவம் தெரிந்தது.

முகத்தில் மிருகத்தின் சாயல் திட்டு திட்டாய்...

'நான்தானா இது... நானா இப்படி மாறிப்போய்விட்டேன்... என்னுள் இருக்கும் மிருகம்தான் என் முகத்தில் தெரிகிறதா... குழந்தை முகம் என் மகன் மதிக்கு என்று அம்மா அடிக்கடி சொல்வாளே... அந்த முகமா நான் கண்ணாடியில் பார்ப்பது? கண்கள் கொலைவெறியுடன் மினுக்கி அலைபாய்கிறதே... மானைக்கண்டதும் கடித்து குதறத் துடிக்கும் கண்கள்... நீங்கள் சிரிக்கும்போது உங்கள் கண்களும் சேர்ந்து சிரிக்கிறது என்று முத்து ரெத்னா சொல்வாளே... அந்த சிரிப்பை எங்கே தொலைத்தேன்...' –தலையை ஒருமுறை உலுக்கிக் கொண்டான் மதி.

'கண்ணாடியை உடைத்து நொறுக்கு' என்றது உள்மனம். –சிந்தனையை ஓரம் தள்ளிவிட்டு சாவியை தேடினான், கொத்தில்.

'ஆறு ஆறு' மஞ்சள் வெளிச்சத்தில் வெளிப்பட்டது. கழுத்தை பிடித்து குறிப்பிட்ட சாவியை தனிமைப்படுத்தினான். அந்தச் சாவிக்கு பீரோ திறந்துகொண்டது.

வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்ட சேலைகள்... சேலைகள்...

அதற்குள் எதையோ பரபரப்பாய் தேடினான்.

சேலை வரிசைகளை கலைத்தான்.

கண்கள் ஏமாற்றத்தை பிரதிபலித்தன.

கோபத்தில் முகம் சிவந்து போயிற்று.

பீரோவில் இருந்த சேலைகளை எடுத்து அங்கும் இங்குமாய் வீச ஆரம்பித்தான். குருவிகூட்டை கலைக்கும் குரங்குபோல இருந்தது அவன் செயல்.

காலடியில் விழுந்து சப்தமிட்டது ஏதோ ஒரு பொருள்.

குனிந்து பார்த்தான்.

முகம் பூவாய் மலர்ந்தது.

அந்த மலர்ச்சியில் கோழிக்குஞ்சை கண்ட கழுகின் கொடூரம்.

## 2

**ஒரு மகனைப் பெற்று அவன் தவறிழைக்கக் காணும் ஒருத்தியைவிட உலகில் அதிக துக்கம் படைத்தவர் யாருமில்லை.**

**-டென்னிஸன்.**

**சு**வை கண்ட பூனையின் கண்களாய் மதியின் கண்கள் மினுக்கியது.

அவன் பார்வை தொட்ட இடத்தில்- தங்க வளையல்கள், தங்க நெக்லஸ், தங்க செயின், தங்க மோதிரங்கள்...

-பதற்றத்துடன் திரும்பி கதவைப் பார்த்தான்.

மவுனமாய் இருந்தது.

முதுகு திரும்பியிருந்த முருகன் படத்துக்கு முன்னாலிருந்த சிவப்பு மண் உண்டியல் பயமுறுத்தியது.

அவசரமாய் திருப்பிய முகத்தில் சிந்தனைக் கோடுகள்.

அவசரம் தொடர்ந்தது அடுத்த செயலிலும்.

இடுப்பிலிருந்த கத்தியை எடுத்தான்.

கத்தியால் சேலை ஒன்றை கிழித்து கைக்குட்டை அளவு துணியை எடுத்தான்.

தரையில் விரித்தான்.



தங்க நகைகளை அள்ளி துணியில் வைத்தான்.

பொட்டலமாய் துணியை சுருட்டி, 'முடிச்சி'ட்டான்.

மார்பு பகுதி பயத்தில் துடித்தது.

அதே இடத்தில்- பனியனுக்குள் பொட்டலத்தை பத்திரப் படுத்தினான்.

அறைக்குள் சிதறி கிடந்த சேலைகளை அவசர அவசரமாய் அள்ளி குப்பையாய் பீரோவுக்குள் வீசினான். மின்னல் வேகத்தில் பூட்டினான். மீண்டும் ஒருமுறை தரையில் ஏதாவது தவறி கிடக்கிறதா என்று கண்களால் தடவினான். எதுவுமில்லை.

திருப்தி அடைந்தவனாய் சொத்து சாவியை இருந்த இடத்தில் வைத்தான். முருகன் படத்தை திருப்பி ஒழுங்காய் வைத்தான்.

இன்னும் அதே சிரிப்பு.

காலடி ஓசையில் நிமிர்ந்தான்.

வாசலில்-

அம்மா.

அதிர்ந்தான்.

உடல் பயத்தில் நடுங்கியது.

அம்மாவின் முகத்தில் எந்தவித சலனமுமில்லை.

அவள் பார்வை உண்டியலை தொட்டுவிட்டு, மதி முகத்துக்கு திரும்பியது.

முகம் முகமாய் சந்திக்க நடுங்கினான்.

"எதுக்கு வந்தே...?" -அம்மாவிடமிருந்து வரக்கூடாத கேள்வி.

மதி முகத்துக்கு நேர் வீசப்பட்டது.

"நா...நான்..." -வார்த்தைகள் வெளிவர தவித்தன.

"சொல்லுடா... எதுக்கு வந்தே...?" -அம்மாவின் குரல் உடைந்து போயிருந்தது.

"என் துணியை எடுத்துட்டு போகலாம்னு வந்தேன்" -அவசரமாய் பொய் சொன்னான்.

அம்மா எதுவும்பேசாமல் மவுனமாய் நின்றுகொண்டிருந்தாள், வாசலில்.

"எப்படி வெளியே போவது?" -மனம் கூண்டில் சிக்கிய

வலியாய் தவித்தது.

"அம்மா... பசிக்குதும்மா" –அவன் போட்ட பாசக் கணக்கு சரியாய் இருந்தது.

அம்மா திரும்பி சமையலறையை நோக்கி நடந்தாள்.

அவனும் பின்தொடர்ந்தான்.

ஹாலில் அப்பா இன்னும் குறட்டையுடன்...

சமையலறையில் சம்மணமிட்டு அமர்ந்தான் மதி.

கத்தி வயிற்றில் இடித்தது.

நீர் சோறு பிழிந்து, சாம்பார் ஊற்றி ஊறுகாயுடன் தட்டை முன்னால் வைத்தாள், அம்மா.

வலது புறங்கையில் ஈரம் உணர்ந்தான்.

அம்மாவின் கண்ணீர்.

நிமிர்ந்து பார்த்தான்.

அம்மாவின் கண்கள் கண்ணீரில்...

தலைகுனிந்து சாப்பிட ஆரம்பித்தான், மவுனமாய்.

சின்னவயது நினைவுகள் வரிசையாய்...

தலை தடவலில் கண் உயர்த்தினான்.

முதுகுக்கு பின்னால் அக்கா சரஸ்வதி நின்றுகொண்டு இருந்தாள்.

அவள் கண்களும் கலங்கியிருந்தன.

அதற்குமேல் உட்கார்ந்து சாப்பிட முடியவில்லை.

'எழுந்துவிடலாமா?' என்று யோசித்தான்.

'அழுதுவிடுவோமோ?' அவனுக்குள் பயம் பயமாய் இருந்தது.

இந்த இடத்தை விட்டுவிட்டு ஓடிவிடவேண்டும் என்று மனம் துடித்தது.

இரண்டு 'மடங்கு' தண்ணீர் குடித்தான்.

அவசரமாய் சாப்பாட்டு தட்டில் கைகழுவினான்.

பனியனை மீறி துருத்திக்கொண்டு நின்றது நகைப் பொட்டலம்.

அம்மாவின் பார்வை அவன் மீதே இருந்தது.



"எங்கே தங்கி இருக்கே...?" –வார்த்தைகளில் எந்த உணர்ச்சியுமில்லை.

"திருவல்லிக்கேணி" –என்றான் சங்கடத்துடன்.

அடுத்து அம்மா கேட்ட கேள்வி அவனை தூக்கிவாரிப் போட்டது.

அந்தக் கேள்விக்கு சட்டென்று எழுந்துகொண்டான்.

அம்மா மீண்டும் அந்தக் கேள்வியை கேட்டாள்– விரல் நீட்டி.

"என்னடா அது...?"

அக்கா அருகில் வந்திருந்தாள்.

மீண்டும் அதே கேள்வியை கேட்டதும் ஒரு நிமிடம் திகைத்துப் போனான்.

நடுக்கத்துடன் அம்மாவைப் பார்த்தான்.

அவள் விரல் சுட்டிக்காட்டிய இடத்தில்... இடத்தில்...

"அம்மா... கத்தி" –என்றான் தயக்கத்துடன்.

"உனக்கு எதுக்குடா கத்தி... யாரையும் குத்துறதுக்கா...? முதல்ல கத்தியை எடு" –அம்மா கைநீட்டினாள் முகத்துக்கு எதிரே.

நடுக்கத்துடன் கத்தியை எடுத்து அவள் உள்ளங்கையில் வைத்தான்.

"சரஸ்வதி... ஒரு கார்டு எடுத்துட்டு வா" –அம்மாவின் குரலுக்கு உள்ளறைக்கு சென்றாள் அக்கா.

நெருப்பின் மீது நிற்பதுபோல் நின்றுகொண்டிருந்தான், மதி.

அம்மாவோ ஒரு வார்த்தை பேசாமல் அமைதியாய் உறைந்துபோனாள்.

சில நிமிடங்கள் கரைந்தபின்–

அக்கா சரஸ்வதி வெளியே வந்தாள்– கையில் ஒரு உறையுடன்.

"ம்... அவன்கிட்ட கொடு."

–அவன் கையில் கொடுத்தாள்.

அக்கா கண்கள் கலங்கியிருந்தன.

'என்ன...?' என்பதுபோல் அம்மாவை நிமிர்ந்து பார்த்தான், மதி.

"உங்க அக்காவுக்கு கல்யாணம்" –என்றாள் உதடுகளைமட்டும் அசைத்து.

கையிலிருந்த உறையை புரட்டிப் பார்த்தான்.

முகப்பு 'திருமண அழைப்பிதழ்' என்றது.

எதுவும் பேசாமல் அம்மாவின் முகத்தைப் பார்த்தான்.

"கல்யாணத்துக்கு இன்னும் நாலு நாள்தான் இருக்குது" –மதி இதற்கும் எந்தவித பதிலும் சொல்லாமல் மவுனமாய் நின்றான்.

"கண்டிப்பா நீ கல்யாணத்துக்கு வந்திடாதே..."

அம்மாவின் வார்த்தைகள் ஆணியெடுத்து நெற்றியில் அறைந்தது போல் இருந்தது. ஏன் என்று கேள்வி கேட்க முடியாமல் தடுத்தன– கடந்த கால நிகழ்வுகள்.

முதுகுக்கு 'பின்னால் அக்காவின் விசும்பல்.

இதயம் பனிப்பறையாய் நகரத் தொடங்கியது.

"நீ ஏன் சரசுவதி அழறே... உன் தம்பி வந்து கல்யாணத்தை நிறுத்துறதுக்கா... இரண்டு தடவை போதையில வந்து ஆறு நிச்சயதார்த்தத்தை நிறுத்தினது மறந்து போச்சா...? உன் தலையில, என் தலையில, அடிச்சி சத்தியம் செய்தானே... என்ன ஆச்சி...? ஒவ்வொரு முறையும் போதையில வந்துதான் கதவைத் தட்டுவான்."

ஹாலில் இருந்து வந்த இருமல் சத்தம் பேச்சை பாதியில் அறுத்தது.

"அப்பா முழிச்சிக்கிடப் போறாரு" –பதற்றமானாள் அக்கா.

"வர்றேன்" –என்றான் மதி குரல் நடுங்க.

"வராதே" –என்றாள் அம்மா.

அவள் குரல் உடைந்து போயிருந்தது.

திரும்பி பார்த்தவன்– அதிர்ந்தான்.

அம்மாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

கையிலிருந்த அழைப்பிதழை உள் பனியனுக்குள்



செருகினான்.

"வரமாட்டேம்மா" –ஒற்றை வரியில் பதில் சொல்லிவிட்டு மாடிப்படி நோக்கி நடந்தான்.

"வாசல் வழியே போப்பா" –அம்மாவின் குரல் கரகரத்தது.

"அ...அப்பா..."

"தூங்கிட்டிருக்கார்."

–திரும்பி முன்வாசலை நோக்கி நடந்தான்.

அப்பா தூங்கிக்கொண்டிருந்தார் முகம் கவிழ்த்து.

அதற்குள் வாசல் கதவை திறந்து வைத்திருந்தாள், அக்கா.

வாசலை கடக்குமுன் திரும்பி அம்மாவைப் பார்த்தான்.

கண்ணீருக்கிடையில் அம்மா தெரிந்தாள்.

'அக்கா கல்யாணத்துக்கு வைத்திருக்கும் நகைகள். கொடுத்துவிடு மதி, கொடுத்துவிடு' –என்று கெஞ்சியது மனசாட்சி.

'போ...போ...' –அலறியது உள்ளே இருந்த மிருகம்.

'கொடுத்து விடு... கொடுத்து விடு...' –என்றது மீண்டும் மனசாட்சி.

'வெளியே போ...' –மரண கூச்சல் வெடித்தது– உள்ளேயிருந்த மிருகத்திடமிருந்து.

மேனி நடுங்கியது.

அவசரமாய் வாசல் கடந்து வெளியேறினான், மதி.

கால்கள் நடக்க சக்தியற்று போனதுபோல உணர்ந்தான்.

மவுனமாய் கதவைப் பூட்டினாள், அக்கா.

வாய் பொத்தி அழுகையை அடக்கினாள், அம்மா.

அப்பா சதாசிவம் கண்மூடிக் கிடந்தார் உறக்கமின்றி.

இரும்புக் கதவு அகலத் திறந்து கிடந்தது– பங்களா சுவர் ஏறிக் குதிக்க தேவையில்லாமல். நேர் எதிரில் அழகிய மரங்களுக்கிடையில் அந்த இரவிலும் அந்த பங்களாவில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

தயக்கமில்லாமல் விடுவிடுவென்று நடந்து உள்ளே நுழைந்தான், மதி.

காலை உரசிய செடிகள் பயமுறுத்திற்று.

நான்கு திசைக்கும் கண்களை ஓடவிட்டான்.

யாரும் இல்லை.

வழக்கமாய் ஓடிவரும் சங்கரையும் காணவில்லை.

சங்கர்... அழகிய நாய்.

நான்கு அடி எடுத்து வைத்திருப்பான்.

எங்கிருந்தோ ஓடிவந்தது சங்கர்– வாலை ஆட்டியபடி.

மதியை சுற்றி சுற்றி வந்து நாக்கால் நக்கி வருடியது.

"எங்கே சின்ன தொரை...?" –பதில் சொல்லாமல் பங்களாவுக்குள் ஓடியது சங்கர்.

பின்தொடர்ந்தான், மதி.

ஓடிக்கொண்டேயிருந்தது சங்கர்.

வரிசையாய் அறைகள் பூட்டிக்கிடந்தன.

கடைசி அறை மட்டும் திறந்து கிடந்தது.

உள்ளே ஓடியது சங்கர்.

எட்டிப் பார்த்தான் மதி.

சின்னதுரையும், கிருஷ்ணனும் கண் இமைக்காமல் எதையோ உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன.

அவர்களுக்கு முன்னால் கிடந்த மேசையில் பெரிய வரைபடம் ஒன்று விரித்து வைக்கப்பட்டிருந்தது. குறுக்கும், நெடுக்குமாய் ரோடுகள் ஓடின. வளைந்து நெளிந்து கூவம் ஆறு தேங்கிக் கிடந்தது. வட்டமும், சதுரமுமாய் புள்ளிகள்.

அது சென்னை மாநகரத்தின் வரைபடம்.

சின்னதுரையின் சுட்டுவிரல் வரைபடத்தில் கோடு கிழித்துக்கொண்டிருந்தது.

விரல் ஓடிய இடமெங்கும் கிருஷ்ணனின் கண்கள் பின்தொடர்ந்தன.

ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு விரல் வந்ததும்–

சட்டென்று 'பிரேக்' பிடித்ததுபோல் நின்றது.

விரல் தொட்ட இடத்தில்–



நீலநிறத்தில் கோபுரம் போல ஒரு படம் தெரிந்தது.

அந்த இடத்தில் நான்கு சாலைகள் முட்டிக்கொண்டன.

"இதுதான் அந்த கோவில்" –என்றான் சின்னதுரை கிசுகிசுப்பாய்.

கண்கள் மினுக்கியது வெளிச்சத்தில்– மிருகத்தின் கண்களாய்.

## 3

**வாலிபம் அபாயகரமான பருவம். சுலபத்தில் நெருப்பு பற்றிக் கொள்ளக்கூடிய பொருளைப் போல் மிகப் பத்திரமாய் காப்பாற்றப்பட வேண்டிய பருவம்.**

**–பெரியார்.**

**உஊ**ஞ்சல்போல தலையை ஆட்டினான் சின்னதுரை.

உதடுகளில் புன்னகை தொங்கியது.

எட்டிப் பார்த்த மதியின் கண்கள் மாதா கோவிலை தேடியது.

"நான்கு ரோடுகள் சந்திப்பு" –விரல் சொடுக்கி ஆமோதித்தான் கிருஷ்ணன்.

"இந்த மாதா கோவிலுக்குத்தான் அந்த விலை" –என்று சொல்லிவிட்டு சிரித்தான் சின்னதுரை.

சிரிப்பில் கிருஷ்ணன் கலந்துகொள்ளவில்லை.

கண்கள் சிந்தனைக்கு தாவியிருந்தன.

"இன்னும் ஏழு நாட்கள்தானே இருக்கிறது."

"அதனாலென்ன...?"

"இந்த வேலைக்கு சரியான ஆள் வேண்டுமே..."

–காலடி ஓசையில் இருவரும் நிமிர்ந்தனர்.

அவர்கள் முன்னால் நின்றுகொண்டிருந்தான், மதி.

"என்னது, மாதா கோவில்...?" –கேள்வி வந்தது

...யிடமிருந்து.

"உனக்கு தேவையில்லாத கேள்வி."

–பதற்றமாய் மேசையில் விரித்திருந்த வரைபடத்தை சுருட்டினான்.

"எதுக்கு படம்...?"

"உன்னை இங்கே வரவேண்டாம்னு சொன்னேன் இல்ல..." –எரிச்சலுடன் கேள்வி வந்தது, சின்னதுரையிடமிருந்து.

கிருஷ்ணன் முகத்தில் கோபம் எட்டிப் பார்த்தது.

"வந்தா கடவுளோட வான்னு சொன்னே. கடவுளோட வந்திருக்கேன்" –துணிப் பொட்டலத்தை தூக்கி மேசைமேல் போட்டான் மதி.

"என்னது கடவுளா...?" –வியப்பாய் வந்தது கேள்வி.

"காசுதானே உனக்கு கடவுள்...?" –மதியின் புன்னகையில் கோபம் தெறித்தது.

"எனக்கு இல்லை, இந்த உலகத்துக்கே காசுதான் கடவுள்..." –துணிப்பொட்டலத்தை பிரித்து மேசையில் கவிழ்த்தான் சின்னதுரை.

ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டு விழுந்தன, தங்க நகைகள்.

தங்க மோதிரங்கள்... தங்க நெக்லஸ்... தங்க செயின்... தங்க வளையல்கள்... விழுந்த வேகத்தில் தங்க வளையல் ஒன்று நழுவி தரையில் விழுந்து உருண்டது.

"ஏதாவது நகைகடை பூட்டை உடைச்சிட்டியா...?" –கண்ணடித்து கிண்டலாய்க் கேட்டான் கிருஷ்ணன்.

பதில் பேசாது முறைத்தான் மதி.

மவுனமாய் தங்க நகைகளை சேகரித்தான் சின்னதுரை. காலடியில் விழுந்துகிடந்த தங்க வளையலை குனிந்து கையில் எடுத்துக்கொண்டான்.

நிதானமாய் சுருட்டிய வரைபடத்தை பத்திரப்படுத்தினான்.

"ம்... எனக்கு நேரமாகிறது" –ஆவேசம் வந்தவனாய் கத்தினான் மதி.



எதுவுமே காதில் விழாதவன்போல நகை பொட்டலத்துடன் உள் அறைக்கு போனான் சின்னதுரை.

அறுபது விநாடிகள் கரைவதற்குள் இரண்டு அட்டைப் பெட்டியுடன் வெளியே வந்தான்.

"சின்னதுரை பொய் சொல்லமாட்டான். ம்... பிடி உன் சொர்க்கம்."

–நீட்டிய இரண்டு அட்டைப்பெட்டிகளையும் பரவசத்துடன் வாங்கிக்கொண்டான், மதி.

பிணத்தைபார்த்த கழுதைப்புலியின் வெறி கண்களில் மிதந்தது.

அவசரமாய் அட்டைப் பெட்டியின் வயிற்றைக் கிழித்துப் பார்த்தான்.

குட்டி குட்டியாய் கண்ணாடி குப்பிகள் எட்டிப் பார்த்தன.

மஞ்சள் கலந்து மினுக்கும் திரவம்.

போதை... போதை... போதை சுமக்கும் திரவம். கொஞ்ச கொஞ்சமாய் இதயம் அறுக்கும் போதை.

"வர்றேன்..." –அட்டைப்பெட்டிகளை மார்போடு அணைத்துக்கொண்டு வாசலை நோக்கி நடந்தான் மதி.

"மதி... ஒரு நிமிஷம்..." –பின்னாலிருந்து குரல் கொடுத்தான் சின்னதுரை.

"ம்... சொல்லு..." –முகத்தை மட்டும் திருப்பிக் கேட்டான், வேண்டா வெறுப்பாய்.

"மதி... நீ ஒரு வேலை செய்யவேண்டும்?" –குரலில் தூண்டில் இருந்தது.

"எந்த வேலையையும் செய்ய முடியாது..." –என்றான், உறுதியான குரலில்.

"நிச்சயம் நீ செய்யத்தான் போகிறாய்..." –மிதப்புக் கட்டையாய் குரல் மிதந்தது.

"ஒருக்காலும் நடக்காது சின்னதுரை" –அவசரமாய் நடந்தான் வாசலை நோக்கி.

"அவசரம் வேண்டாம். இன்னும் ஏழு நாட்கள் இருக்கிறது."

"அன்று கிறிஸ்துமஸ்" –என்றான் தெளிவான் உச்சரிப்பில். காதில் விழாதவனாய் வேக நடை நடந்தான் மதி.

"டிசம்பர் இருபத்தைந்து" –என்றான் சின்னதுரை குரலை சற்று உயர்த்தி.

முன் கதவை நெருங்கியிருந்தான் மதி.

"மதி... டிசம்பர் இருபத்தைந்து நாம் சந்தித்துதான் ஆகவேண்டும்" –உரக்கக் கத்தினான், சின்னதுரை.

"அதற்குள் நான் செத்துப்போகவேண்டும்" –திரும்பிபார்க்காமல் வார்த்தைகளை உதிர்த்துவிட்டு வெளியேறினான், மதி.

திகைத்துப்போய் நின்றுகொண்டிருந்தனர் சின்னதுரையும், கிருஷ்ணனும்.

'ஜாக்கிரதை' என்றது உள்ளே இருந்த மிருகம்.

அட்டைப் பெட்டிகள் கீழே விழுந்து விடாதபடி மார்போடு இறுக அணைத்துக்கொண்டான், மதி.

நடக்கமுடியாமல் கால்கள் தடுமாறின.

மூச்சிறைத்தது.

முகமெங்கும் வியர்வை வழிந்தது.

முடி கலைந்துபோயிருந்தது.

சிரமப்பட்டு –தங்கியிருந்த இடம் வரை நடந்து வந்து விட்டான்.

படியேற முடியாமல் பரிதாபமாய் நின்றான்.

'இருபது படிகள் ஏறவேண்டும்'

சுவரைத்தொட்டான்.

விரல்கள் நடுங்கின.

உள்ளேயிருந்த மிருகத்துக்கு போதை அவசர தேவையா இருந்தது.

கையிலிருந்த அட்டைப்பெட்டி விழுந்து நொறுங்கிவிடுமோ என்று பயமாயிருந்தது.

படியில் பெட்டிகளை வைத்துவிட்டு, அப்படியே சுவரில் சரிந்து அமர்ந்தான்.



கொஞ்சம் கொஞ்சமாய் தூக்கத்தின் பிடிக்குள் போயிருந்தான்.

'டக்...டக்...?

நடந்து வருகிற சத்தம்.

தார் சாலையில் நடந்து வருகிற சத்தம்.

நிமிர்ந்து பார்த்தான்.

கறுப்பு சாலையில் யாருமில்லை. வெறுமையாய் கிடந்தது.

சத்தம் நெருங்கிவர எழுந்து நின்றான்.

குதிரை ஒன்று ஓடி வருவது தெரிந்தது.

வெள்ளைக் குதிரை.

பால்வண்ணக் குதிரை.

ஓடிவந்த குதிரை. அவனைக் கண்டதும் ஓட்டத்தை நிறுத்தியது.

முகம் பார்த்தது. வாலை சுழற்றியது.

கால் மாற்றி, கால் மாற்றி நடனம் தெரிந்ததுபோல் சுழன்று சுழன்று ஆடியது.

அந்த நடனத்தில் அழைப்பு இருந்தது.

தயக்கத்துடன் குதிரையை நெருங்கினான்.

குதிரைமீது ஏறி அமர, மனதுக்குள் ஆசைபிறந்தது.

நான் அமர்ந்தால் அந்த வெள்ளைக்குதிரை அழுக்காகி விடுமோ என்ற தயககம் இருந்தது.

அந்த வெள்ளைக் குதிரையோ கனைத்து குதித்தது.

என் முதுகில் ஏறிக்கொள் என்று சொல்லாமல் சொன்னது போலிருந்தது.

ஆசை உந்தித்தள்ள– குதிரை மீது தாவி ஏறினான்.

அடுத்த விநாடி–

மின்னல்வேகத்தில் ஓட ஆரம்பித்தது, அந்த வெள்ளைக் குதிரை.

மிகுந்த சந்தோஷம் தந்தது அதன் ஓட்டம்.

கொஞ்ச நேரத்திலேயே அந்த சந்தோஷம் தொலைந்து போயிருந்தது. குதிரை தன் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதை முழுதாய் உணர்ந்துகொண்டான்.

தார் ரோட்டிலிருந்து இறங்கி முள் புதருக்குள் ஓ
ஆரம்பித்தது.

என்ன செய்வது... என்ன செய்வது...? தவித்தான்.

ஓட்டம் ராட்சதத்தனமாய் இருந்தது.

கால் கைகளில் முள் கிழித்து ரத்தம் வழிந்தது. குதிரையிலிருந்து குதித்துவிடலாமா என்று யோசித்தான்.

அதற்குள் குதிரை ஒரு பெரிய முள்மரத்தில் அவனை
கொண்டு மோதியது.

வலி தாங்க முடியாமல் அலறினான்.

ஆ...

குதிரை முதுகு உதற– இவன் தலைகீழாய்....

–படியிலிருந்து உருண்டு கீழே விழுந்திருந்தான் மதி.

திடுக்கிடலோடு எழுந்து அமர்ந்தான்.

விடிந்து போயிருந்தது.

'இதென்ன கனவா... இருந்த இடத்திலேயிருந்து தூங்கிவிட்டேனா– குதிரை எதன் வடிவம்...? இந்த கனவு என்ன சொல்ல வருகிறது... கனவுக்கு அர்த்தம் உண்டா?' –முகத்தில் ஒட்டியிருந்த மண்ணை துடைத்தான்.

சுற்றிலும் ஒருமுறை பார்த்தான்.

யாருமில்லை.

மேற்கு வானத்தில் இன்னும் இருட்டு மீதமிருநதது.

அட்டைப்பெட்டிகளை தூக்கிக்கொண்டு மாடிப் படிகளில் ஏறினான், நிதானமாய்.

உதடுகள் உலர்ந்துபோயிருந்தன. கண்ணுக்குள் குளிர் ஊசிகள்.

உடம்பு வெப்பம் இழந்திருந்தது.

தலை 'விண்... விண்' என்று தெறிக்க ஆரம்பித்திருந்தது.

ஒவ்வொரு படிக்கும் சிரமம் உணர்ந்தான்.



கால்கள் தடுமாறுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் மூளை தடுமாறியது.

மயக்கம் வரும்போலிருந்தது.

ஏதாவது சூடாய் குடிக்க வேண்டும் என்றது உள்மனம்.

உள்ளே இருந்த மிருகமோ 'போதை...போதை...' என்றது.

சிரமப்பட்டு படிகளின் உச்சத்திற்கு வந்திருந்தான்.

தலைகீழாய் விழுந்துவிடுவோமா என்ற பயம் எட்டிப் பார்த்தது.

பூட்டியிருந்த கதவில் தலை மோதி நின்றான்.

அதிர்ச்சியில் பூட்டு ஆடியது.

காலடியில் அட்டைப்பெட்டிகளை வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

'சாவியை எங்கே வைத்தேன்?' –அவசர தேடலில் சாவி கைக்கு வர மறுத்தது.

கடைசியாய் சாவி கைக்கு வந்தது.

கொஞ்சநேரம் பூட்டுக்கும், சாவிக்கும் போராட்டம் நடந்தது.

இறுதியில் வெற்றி கிடைத்தது.

கதவை அகல திறந்துகொண்டு அறைக்குள் நுழைந்தான்.

'உடனே வேண்டும்... உடனேவேண்டும்' –அரட்டியது உள்ளே இருந்த மிருகம்.

பதற்றத்துடன் திரும்பி ஓடினான். வாசலிலிருந்த அட்டைப் பெட்டிகளை தூக்கி வந்து படுக்கையில் வைத்தான்.

அவசரமாய் கதவைப் பூட்டினான். விரல்கள் நடுங்கின. பரபரவென்று அட்டைப்பெட்டியை கிழித்து– சிறிய கண்ணாடி குப்பி ஒன்றை வெளியில் எடுத்தான்.

அதன் தலையைத் திருகி, திரவத்தை சிரிஞ்சியின் வயிற்றுக்குள் உறிஞ்சி, தன் உடலில் ஏற்றிக்கொண்டான்– வலி தாங்கி,

சில விநாடிகளில் தொண்டைக்குழியில் அதன் தாக்கம் உணர்ந்தான்.

அப்படியே எழுந்து அறையை இரண்டுமுறை சுற்றிவந்தான்.





'பறக்கவேண்டும்' என்றது உள்ளே இருந்த மிருகம்.

துள்ளிக் குதித்தவன் கால் தடுக்கி, படுக்கையில் விழுந்தான் குப்புற.

தூக்கம் வந்தது– துக்கத்துடன்.

தூங்கவிடாமல் அக்கா சரஸ்வதி அழுதாள். கன்னத்தில் கண்ணீர் வழிய வழிய அழுதாள்.

'போய்விடு...போய்விடு...'என்றான் பயத்துடன்.

இடையில் எங்கிருந்தோ வந்து அப்பா திட்டினார். குதித்து குதித்து வார்த்தைகளை வீசினார்.

தப்பிச்செல்ல இடம் தேடினான்.

குறுக்கே வந்து நின்றாள் அம்மா, கண்ணீருடன்.

'அம்மா என்னைக் கொன்றுவிடு... அம்மா என்னைக் கொன்றுவிடு' –என்றான் தயக்கத்துடன்.

உடம்பு குளிர்ந்தது.

பயத்துடன் தலை குனிந்து நின்றான்.

கொலுசு அணிந்த பாதம் ஒன்று முகத்தில் மிதித்து தள்ளியது.

எங்கோ தொலைதூரம் தூக்கி வீசப்பட்டது போல் உணர்ந்தான்.

வான்வெளியில் சுழல்வது போல் மனதுக்குட்பட்டது.

கண்விழித்துப் பார்த்தான்.

மேகத்தின் மேல் படுத்திருப்பது போலிருந்தது.

எதிரில்,

நடந்து வந்தாள், முத்துரெத்னா.

அவனைப் பார்த்ததும் குலுங்கி குலுங்கி சிரித்தான்– கொஞ்ச நேரத்தில் தூங்கிப்போனான் அப்படியே!

"தட்... தட்... தட்..." –கதவு தட்டப்பட்டது பலமாய்.

சிரமமாய் கண் விழித்தான்.

'யாரா இருக்கும்?'

ஜன்னல் வழியே சூரிய வெளிச்சம் உள்ளே விழுந்து

டித்தது.

சுவர்க்கடிகாரம் மணி நான்கு என்றது.

"தட்...தட்...தட்..." மீண்டும் கதவு தட்டப்பட்டது- இன்னும் பலமாய்.

எரிச்சலுடன் கோபமும் எட்டிப்பார்த்தது:

எழுந்துபோய் கதவைத் திறந்தான்.

அடுத்த விநாடி–

அதிர்ந்தான்.

வாசலில்–

முத்துரெத்னாவின் அப்பா.

## 4

**காதல் என்பது சுகமல்ல... வலி!**

**–நடிகை சிம்ரன்.**

ஆடியது இதயம் ஒருமுறை.

வெள்ளைச்சட்டையில் கறுப்பாய் நின்ற உருவத்தைப் பார்த்ததும் பயம் வந்திருந்தது.

இன்னும் அதிகமாய் பயமுறுத்துவதுபோல–

சீற்றத்துடன் கேள்வி வந்தது. முத்துரெத்னாவின் அப்பாவிடமிருந்து.

"நீதான் மதியா...?" –அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் எதிர் கேள்வி கேட்டான் மதி.

"நீங்க யாரு...?"

"நீதான் மதியா...?" –இரண்டாவது முறையாய் அதே கேள்வியை கேட்டார்.

கோபத்தில் வார்த்தைகள் அரைபட்டிருந்தன.

"முதல்ல நீங்க யாருன்னு சொல்லுங்க... உங்களுக்கு என்ன வேணும்...?" போதை சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போயிருந்தது.



"நான் முத்துரெத்னாவை பெத்த அப்பமல" –சட்டென்று மதிக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை.

"நீ...நீங்க..." –நாக்கு தடுமாறி பற்களில் இடித்துக் கொண்டது.

"ஆமாம்ல. நான் முத்துரெத்னாவை பெத்த அப்பம்தாம்ல. உங்கிட்ட சொல்லிக்கிட்டு போகத்தான் வந்தேன். உன் கூறுகெட்டத்தனத்தை நிறுத்திக்க. நீ அடிச்ச கூத்துபோதும். முத்துரெத்னாவைப் பார்க்க போகாத. நிறுத்திக்க" –குரலில் மிரட்டல் தடவியிருந்தது.

"மிரட்டவா செய்றீங்க...?" –கோபத்தில் மதியின் உதடுகள் துடித்தன.

"மிரட்டத்தாம்ல செய்யறேன். விட்ருன்னா விட்டுரு."

"நான் விடமாட்டேன். முத்துரெத்னாவை விடமாட்டேன்."

"ஏன் விடமாட்டே...?"

"நான் முத்துரெத்னாவை காதலிக்கிறேன்" –என்றான், தீர்மானமான குரலில்.

" கோட்டிக்காரத்தனமா பேசாதல. அந்த புள்ளை உன்னை வேண்டாம்னு சொல்லுது. நீதான் தாய்- தகப்பன் பேச்சைக்கேட்காம கெட்டு குட்டிச்சுவரா போயிட்டே... அப்படியே போய் தொலைஞ்சிடு... அந்தப் புள்ளையை விட்டுரு."

"முடியாது. ஒருநாளும் முடியாது" –என்றான் பைத்தியம் பிடித்தவன் போல தலையை ஆட்டி.

"முடியாதுன்னா முடிச்சிப்புடுவேன். திருநெல்வேலியிலிருந்து கிளம்பும்போது மறக்காம அரிவாளையும் எடுத்துட்டு தாம்ல ரயிலேறி வந்திருக்கேன். சொன்ன பேச்சை கேட்கலன்னா அரிவாளால வவுந்து, சாக்குல கட்டி தாமிரபரணி கரையில இருக்கிற தென்னைக்கு வெட்டி உரமா வைச்சிபுடுவேன். சொல்லிபுட்டேன்" –பேசிய பேச்சில் மூச்சிறைத்தது, முத்துரெத்னாவின் அப்பாவுக்கு.

கோபத்தில் கண் இமைகள் துடித்தன.

ஒருமுறை துண்டை உதறி தோளில் போட்டார் சிற்றமாய்.

அது அவருடைய கோபம் புரியாமல் நழுவி தரையில் விழுந்தது.

குனிந்து மேல் துண்டை எடுத்தவர் கண்களில்—

உடைந்த கண்ணாடி குப்பிகளும், வீசியெறியப்பட்ட சிரிஞ்சுகளும் பட்டன.

மீண்டும் துண்டை உதறி தோளில் போட்டார்.

வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு படிகளில் இறங்கத் தொடங்கினார்.

செய்வதறியாது திகைத்துப் போய் நின்றுகொண்டிருந்தான் மதி.

சட்டென்று நின்று திரும்பி பார்த்தார், முத்துரெத்னாவின் அப்பா.

மதியை குறிவைத்து வீசினார்— தோளில் கிடந்த துண்டை சுருட்டி.

வீச்சில் கோபம்! வார்த்தைகளில் அனல்.

"கோட்டிக்காரன்... கோட்டிக்காரன்..." —படிகளில் இறங்கி நடந்தார், நிதானமாய்.

அவர் தலைமறைந்ததும் கோபம் எட்டிப் பார்த்தது மதிமுகத்தில்.

"நான் கோட்டிக்காரனா? நான் கோட்டிக்காரனா...?" —கையில் கிடைத்த கண்ணாடி தம்ளரை தூக்கி சுவரில் வீசினான்.

"ச்... சிலிங்..." —சத்தத்துடன் அது உடைந்து சிதறியது, சுவரில் மோதி.

ஓடிப்போய் படுக்கையில் விழுந்தான், குப்புற.

வலக்கையால் படுக்கையை குத்தினான்— ஓங்கி ஓங்கி.

"முத்து ரெத்னா... முத்து ரெத்னா..." என்று உதடுகள் முணுமுணுத்தன— நனைந்த இமைகள் கண்களை மூடின அவசரமாய்.



உதடுகளை கண்ணீர் தொட்டது.

இதயமும் அழுதது.

கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் தலையணையை நனைத்தது.

'முத்துரெத்னா வந்து அருகில் அமர்ந்தாள்...

கன்னத்தில் வழிந்த கண்ணீரை விரல்களால் துடைத்தாள்...

தலைமுடி கலைத்தாள்... உதடுகளை நனைத்த கண்ணீரை...'

—கண்களை திறந்துபார்த்தான்.

அருகில் யாருமில்லை.

அவன் மட்டும் அநாதையாய்...

அவனைச்சுற்றிலும் தலை உடைந்த கண்ணாடி குப்பிகள்... சிரிஞ்சிகள்...

எழுந்து அமர்ந்தான், கண்ணீருடன்.

புறங்கையால் கண்ணீரை துடைத்துக்கொண்டான்.

படுக்கைக்கு அடியிலிருந்த சூட்கேஸை நிதானமாய் இழுத்து வெளியில் எடுத்தான்.

தயக்கமாய் திறந்தான்.

அவனுக்காக காத்திருந்தது ரோஜா வண்ண உறை.

உறையை பூவாய் கையில் எடுத்து—

அதன் பாதுகாப்பில் இருந்த மடிக்கப்பட்ட காகிதத்தை உருவி வெளியில் எடுத்தான்.

அடுத்த விநாடி— அந்த மடிக்கப்பட்ட காகிதத்தின் உறக்கம் கலைத்தான்.

அந்த காகிதம் சொன்னது.

**'என்னுயிரே மதி,**

**என்னுயிரை அழிக்கும் எண்ணம் வந்துவிட்டது, உனக்கு.**

**என் எழுத்து உனக்கு புரியவில்லையா கண்ணே...**

**உன்னுள் இருப்பது என் உயிர்தானே.**

**அன்பே எத்தனைமுறை சொன்னேன்.**

**என் வார்த்தைகள் உன் இதயத்துக்கு ஏன் போய்ச் சேரவேயில்லை...?**

என் மீது நீ வைத்திருக்கும் காதல் உண்மையில்லையா...?
இல்லை. போதைதான் உன் முதல் காதலியா...?

உன் போதைப் பழக்கம் எத்தனை அவமானங்களை நம் இருவருக்கும் வாங்கித்தந்திருக்கிறது... கடைசியாய் உன்படிப்பையும் தின்று தீர்த்துவிட்டதே... நம் காதலை தின்று தீர்க்க அதிக நாள் இல்லை.

இதே கடைசியாய் இருந்தால் நம் காதல் பிழைக்கும்.

போதைப் பழக்கத்தை உன்னால் விடமுடியாதென்றால், இல்லை போதைப் பழக்கம் உன்னைவிடாதென்றால் என்னை விட்டுவிடு, மதி. என்னால் இனியும் தாங்கமுடியாது. வேதனை எனக்கு போதும். உன்னை உதறிவிட்டு இன்னொரு ஆண்மகனை நான் காதலிப்பேன் என்றோ, கைப்பிடிப்பேன் என்றோ கனவிலும் நீ நினைக்கவேண்டாம். நீ மனிதனாக இருந்தபோது என்னுள் நீ இருந்ததை என்றும் அழியாமல் பாதுகாப்பேன். கடைசிவரை, என் உயிர்மூச்சு அடங்கும்வரை! நீ என்னை சந்திப்பதாய் இருந்தால் மனிதனாய் வா. எனக்கு மிருகம் வேண்டாம். எனக்கு மிருகம் வேண்டாம்.

என்றும் உன் காதலி
முத்து ரெத்னா.'

–கடிதம் கண்ணீரில் நனைந்து முடிந்திருந்தது.

மதியின் கண்ணீர் காகிதத்தில் விழுந்து எழுத்துகளை சிதைத்தது.

பெட்டியிலிருந்த துணிகளை விலககி ஏதோ ஒன்றை எடுத்தான்.

அது– புகைப்படம்.

ஒரு இளம்பெண் சிரித்துக்கொண்டிருந்தாள்.

"இனிவரமாட்டேன் முத்துரெத்னா... நீ நிம்மதியாய் இரு... உன் மதி நல்லவன்... உன் மதி நல்லவன்..." –புகைப்படத்துக்கு அழுத்தமாய் முத்தம் கொடுத்தான்.

கண்ணீர் துளிகள் அதை நனைத்தது.

சிரிக்கும் முத்துரெத்னாவின் கண்ணீரை சட்டையால்



துடைத்தான்.

அப்படியே மல்லார்ந்து படுத்தான்.

தலைக்குமேல் மின்விசிறி சுற்றிக்கொண்டிருந்தது.

கண் எரிந்தது.

மீண்டும் தலைவலிக்க ஆரம்பித்தது.

உள்ளே இருந்த மிருகம் விழித்துக்கொண்டது.

பசி... பசி... என்று அரட்டியது.

படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தான்.

அட்டைப்பெட்டி திறந்து– கண்ணாடி குப்பி தலை உடைத்து– 'சிரிஞ்ச்' நிரப்பி–

உடம்பில் ஏற்றிக்கொண்டான் வலி முனகலுடன்.

சில நிமிடங்களில் வியர்த்துப் போயிருந்தான்.

போதையில் கண்கள் சிவந்துபோய், உதடுகள் துடித்தன.

கையில் முத்துரெத்னாவின் படம் சிக்கியது.

உற்றுப் பார்த்தான்.

முத்துரெத்னா சிரித்தாள்.

"ஏய் இன்னுமா சிரிக்கிறே... நேர்ல வர்றேன்... நேர்ல வர்றேன்... உன் அப்பன் அருவா என்ன செய்யும்னு பார்த்திடுறேன்" –படத்தில் ஓங்கி ஓங்கி குத்தினான்.

அறை அதிரும்படி 'ஓ'வென்று சிரித்தான்.

பெட்டியை கலைத்து, பதற்றமாய் தேடி– இன்னொரு உறை ஒன்றை எடுத்தான்.

பளபளப்பான வெள்ளை உறையில் மஞ்சள் பூக்கள்.

உறையை உதறிவிட்டு, உள்ளேயிருந்த காகிதத்தை எடுத்தான். காதல் சின்னங்கள் சுமந்திருந்தது– அந்தக் காகிதம்.

நீலநிற எழுத்துகள் 'காதல்' என்றது.

'அன்பே மதி...' –என்று ஆரம்பித்தது அந்தக் கடிதம்.

'இதுதான்... இதுதான்' –கடிதத்தை பையில் திணித்துக் கொண்டான்.

அவசர அவசரமாய் அறையை பூட்டப் போனவன்

கண்களில்–

படுக்கையில் கிடந்த முத்துரெத்னாவின் படம் பட்டது.

ஆத்திரத்துடன் அறைக்குள் நுழைந்தான்.

முத்துரெத்னா சிரித்தாள்.

குனிந்து படுக்கையிலிருந்து படத்தை எடுத்து கிழிக்க முயன்றவன்–

ஏதோ நினைத்துக்கொண்டவன்போல அதை பைக்குள் பத்திரப்படுத்தினான்.

இம்முறை அறையை பூட்டினான், நிதானமாய்.

பூட்டை ஒருமுறை உலுக்கிப் பார்த்தான்.

படிகளில் தடதடத்து ரோட்டுக்கு வந்தான்.

அடுத்த ஐம்பதாவது நிமிடத்தின் ஆரம்பத்தில்–

முத்தரெத்னா தங்கியிருந்த விடுதி வாசலில் போய் நின்றுகொண்டிருந்தான்.

வாசலில் இருந்த காவலாளி கவனமின்றி அமர்ந்திருந்தான்.

சட்டென்று அவனை தாண்டி உள்ளே நுழைந்தான் மதி.

கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினான் காவலாளி.

"வெளி ஆட்கள் உள்ளே போகக்கூடாது" –குரலில் கண்டிப்பு மிதந்தது. –நான் முத்துரெத்னாவைப் பார்க்கணும் –என்றான் அலட்சியமாய். கையை உதறி விடுவித்துக் கொண்டான்.

"நீங்க யாரு, முத்துரெத்னாவுக்கு...?" –சந்தேகத்துடன் கேள்வி வந்தது.

"அப்பா." –என்றான் மதி, எரிச்சலுடன்.

"எ...என்னது..."

"அண்ணன்" – என்றான் மெலிதான குரலில்.

"இருங்க. அழைச்சிட்டு வர்றேன்" –மதியை ஒருமுறை ஏற இறங்க பார்த்துவிட்டு உள்ளே நடந்தான் காவலாளி.

வேகமாய்– நெருப்பின் மேல் நின்றுகொண்டிருப்பது போல காத்திருந்தான், மதி.

சில நிமிடங்கள் கரைந்தபின்–



காவலாளியுடன் வந்து சேர்ந்தாள், முத்துரெத்னா.

படத்தில் பார்த்ததைவிட அழகாய் இருந்தாள்.

அந்தச் சிரிப்பை மட்டும் தொலைத்திருந்தாள்.

அவள் கரிய பெரிய கண்களில்– அதிர்ச்சி அப்பட்டமாய் தெரிந்தது.

"நீயா...?" –என்றாள் குரல் நடுங்க.

"ஏன்... உன்னோட புதுக் காதலனை எதிர்பார்த்தியா...?" –அக்கினியை அள்ளிவீசினான், இதயத்தில்.

"மதி இங்க எதுக்கு வந்தே...?" –முத்துரெத்னாவின் குரலில் கெஞ்சல் இருந்தது.

"வருவேன். உயிரோடு இருக்கும் வரை வருவேன்?"

"நான் உயிரோடு இருக்கும் வரையா?" –கேள்வி மதியின் முகத்தில் அறைந்தது.


## 5

**படகு ஒழுங்காய்ப் போய்கொண்டிந்தால்தான் அதில் பயணம் செய்யும் நாம்– விருப்பம்போல வலையை வீசிப் பார்க்கலாம். தண்ணீருக்குள் படகே தலை மூழ்கித் தரை தட்டிப் போனால்– நாம் வலை வீசமுடியாது. நம்மை தேடித்தான் வலை வீசிக்கொண்டிருப்பார்கள்.**

**–கவிஞர் மு. மேத்தா.**

தீயை அள்ளி முகத்தில் வீசியது போல் உள்ளுக்குள் துடித்துப்போனான் மதி. 'வருவேன். உயிரோடு இருக்கும்வரை உன்னைத்தேடி வருவேன்' என்ற மதியின்வார்த்தைகளுக்கு 'நான் உயிரோடு இருக்கும் வரையா...?' என்று முத்துரெத்னா கேட்ட கேள்வி அவனுக்குள் புகுந்து கசக்கிற்று. 'முத்துரெத்னா– முத்துரெத்னா' என்று அரற்றியது இதயம்.

"இல்லை... இல்லை" –என்றான் குறுக்கே தலையை ஆட்டியபடி.





"இல்லை. நான் உயிரோடு இருக்கும்வரை உன்னைப் பார்க்க தேடி வருவேன்" –என்றான் தீர்மானமான குரலில்.

"மதி... பிளீஸ், போயிடு மதி" –கெஞ்சினாள் முத்துரெத்னா கண்ணீர் பொங்க.

அவனுக்குள் இருந்த மிருகமோ பிடிவாதம் பிடித்தது.

"போகமாட்டேன். பதில் தெரியாம போகமாட்டேன்."

"என்ன பதில் தெரியணும்...?"

"உங்க அப்பன் என்ன கொம்பனா... என்னைத் தேடிவந்து மிரட்டுகிறான். உன் அப்பன் அருவாதான் வெட்டுமா... ம்... சொல்லு... ம்... சொல்லு."

"நீ இங்க வந்து என்னை தொந்தரவு செய்யலன்னா எங்கப்பா ஏன் அங்க வரப்போறாரு...?"

"நான் என் காதலி முத்துரெத்னாவைப் பார்க்க வருவேன்."

"உன் காதலி முத்துரெத்னா செத்து ரொம்ப நாள் ஆகிப் போச்சி மதி" –என்றாள் முத்துரெத்னா, உடைந்த குரலில்.

கண்களிலிருந்து கண்ணீர் 'மளமள'வென்று வழிந்தது.

"காதல் பொய்யா முத்துரெத்னா...?"

"காதல் பொய்யில்லை. நமக்குள் இருந்த காதலை உனக்குள் இருக்கிற மிருகம் தின்னுருச்சி" –என்று சொட்டும் கண்ணீருடன் சொன்ன முத்துரெத்னா, அடுத்த விநாடி அழுதுகொண்டே உள்புறம் நோக்கி ஓடினாள்.

முத்துரெத்னா... முத்துரெத்னா" –பதற்றமாய் பின்னால் ஓட முற்பட்டான் மதி.

முதல் காலடி நகர்த்தலில் அவசரமாய் தடுக்கப்பட்டான் காவலாளியால்!

திமிறினான். மீண்டும் பலமாய் தடுக்கப்பட்டான்.

முழுப் பலத்தையும் பிரயோகித்து, மூர்க்கமாய் காவலாளியை தள்ளினான், மதி.

போதையில் வெறிபிடித்தவன் போல நடந்துகொண்டான்.

அடுத்த ஐந்தாவது நிமிடம்–

முகம் தெரியாத நிறையபேர் அடித்திருந்தார்கள் மதியை. உதடு கிழிந்து, ரத்தம் கொட்டியது.

"உன்னை விடமாட்டேன் முத்துரெத்னா... உன்னை விடமாட்டேன்..." –எழுந்து நின்று சிரமமாய் பேசினான்.

அவன் குரல் அவனுக்கே அந்நியமாய்பட்டது.

சாலையை நோக்கி நடந்தான், நொண்டியபடி.

இதயமும் நொண்டியது.

அவன் நடந்து போவதை சன்னலில் நின்று பார்த்து கொண்டிருந்தாள் முத்துரெத்னா.

பார்வையை கண்ணீர் மறைத்தது.

சாலையில் நின்று திரும்பி, விடுதியைப் பார்த்தான்.

சன்னலில் நின்றுகொண்டிருந்த முத்துரெத்னா தெரிந்தாள்.

அவன் கண்களுக்கு கொம்பேறிமூக்கன் பாம்பாய் தெரிந்தாள்.

மவுனமாய் நடக்க ஆரம்பித்தான், எதிர்திசையில்.

நகரெங்கும் சுற்றித்திரிந்துவிட்டு–

அந்த ஆற்றுப்பாலத்தில் அமர்ந்தபோது, இரவு மணி ஒன்பது.

கூவம் ஆறு சலனமில்லாமல் நகர்ந்து கொண்டிருந்தது.

அந்த ஆற்றுக்கே உரிய துர்நாற்றம் நாசியை இம்சைப் படுத்தியது.

வாகனங்கள் இரைச்சலுடன் அங்கும் இங்கும் பாய்ந்து கொண்டிருந்தன.

அவனுக்குள் அமைதி வந்திருந்தது.

நிமிர்ந்து பார்த்தான்.

வானம் கண்முன் விரிந்துகிடந்தது. 'வெல்வெட்' கறுப்பாய் மினுக்கியது.



அப்படியே பாலத்தில் மல்லார்ந்து படுத்தான் மதி.

யாரோ ஒரு பெண் கோபத்தில் விசிறியடித்த வைரத் துணுக்குகளாய் நட்சத்திரங்கள் அவன் கண்களில் தெரிந்தன. மஞ்சள் நிலவு மதிக்கு ஆணாக தெரிந்தது. சோகத்தில் கலங்கி, யாருக்கோ பயந்து ஓடிக்கொண்டிருக்கும் காதலனாய் தெரிந்தது. காதலி துரத்தி அடிப்பாளோ...

கண்களை மூடினான்.

இமைகளில்கண்ணீர் ஒட்டியது. வடகிழக்கு பருவகாற்று கூவத்தின் நாற்றத்தை இழுத்து வந்து முகத்தில் விசிறியது.

காதல் நினைவுகள் முத்துரெத்னாவை இழுத்து வந்து கண்களில் போட்டது.

முத்துரெத்னா சிரித்தாள். காதல் கசிய சிரித்தாள்.

சட்டென்று கண்களைத் திறந்தான்.

முத்துரெத்னா காணாமல் போயிருந்தாள், அந்த வினாடியே!

சோகநிலவு தெரிந்தது, வானத்தில்!

மீண்டும் கண்களை மூடினான்.

முத்துரெத்னா ஓடிவந்திருந்தாள்.

இரண்டு கண்களும் சிரிக்க சிரித்தாள்.

**அ**ன்றும் அப்படித்தான் சிரித்தாள் முத்துரெத்னா.

எதிரில் அமர்ந்திருந்த மதி கண் இமைககாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ம்... மதி... முகத்தில் என்ன தேடுகிறாய்...?"

"கண்களில்."

"ம்... கண்களில் என்ன தேடுகிறாய்...?"

"காதலை."

"என்ன... காதலையா...?"

"காதலைத் தேடுகிறேன்."

"என்ன விசித்திரம். கண்களில் காதலை தேடுகிறாயோ...

"ஆம். காதலைத்தான் தேடுகிறேன்" -என்றான் ம... உறுதிப்படுத்தும் குரலில்.

அதற்கும் சிரித்தாள் முத்துரெத்னா.

"காதலை என் கண்களுக்குள்ளா தொலைத்தாய்?"

உன் கண்களுக்குள் தொலைத்தது உண்மைதான். ஆனா... தொலைத்தது காதலை அல்ல."

"எதைத் தொலைத்தாய்...?"

"என்னை... மதியை..."

"ஒரு பொருளை தொலைத்துவிட்டு, அந்த இடத்தி... இன்னொரு பொருளை தேடினால் எப்படி கிடைக்கும்...?"

"அதுதான் காதல்..." -அந்தப் பதிலுக்கும் சிரித்தா... முத்துரெத்னா.

அவ்ள் கண்களும் சிரித்தன. மதி அந்தக் கண்களை... உற்றுப் பார்த்தான்.

"என் கண்களில் காதல் கிடைத்துவிட்டதா?"

"கிடைக்கவில்லை. இன்னும் தேடுகிறேன்."

"கிடைத்தால் எப்படி எடுப்பாய்...?"

"கிடைத்ததும் சொல்கிறேன்."

"இப்பொழுதே சொல்" -கெஞ்சியது முத்துரெத்னாவி... குரல்.

"நீ சொல் பார்க்கலாம்."

"என் கண்களிலிருந்து உன் கண்களால் எடுப்பாயோ...?"

"அதற்கு வழியில்லை. அந்தக் கள்ளி காதலை ஒளித்து வைத்திருக்கிறாய் பத்திரமாய்."

"எந்தக்கள்ளி...?"

"முத்துரெத்னா."

"எங்கே ஒளித்து வைத்திருக்கிறாள்...?"

"இதயத்தில்."



"அங்கேயிருந்து எப்படி எடுப்பாய் காதலை?"

"அதற்கு ஒரு வழியிருக்கிறது" -என்றான், மதி மந்திரவாதி போல.

"என்ன வழி...? எந்த வழி...?" -வியப்பில் விழிவிரித்தாள், அவள் அகலமாய்!

தன் சுட்டுவிரலால் தொட்டான், அவள் உதடுகளை!

"இதுதான் வழி" -அதிர்ந்தாள் முத்துரெத்னா.

அது- காதல் அதிர்ச்சி.

விரல் வழியே உதடு தொட்டு- இதயம் புகுந்தது மின்சாரம்.

அது- காதல் மின்சாரம்.

"எ...எப்படி... எடு...எடுப்பாய்...?"

"உதடுகளால்."

"நான் எடுக்கவிடமாட்டேன்."

"என்ன செய்வாய்...?"

"நானே தந்துவிடுகிறேன்" -சட்டென்று முத்துரெத்னா தன் உதடுகளால் மதியின் உதடுகளை...

**ம**ழையில் சர்க்கரையாய் கரைந்தது நேரம்...

சட்டென்று முடியவில்லை.

அன்று மதி வாங்கிய முத்தம்-

முந்நூறு நாட்களாய் காத்திருந்து பெற்ற முத்தம்.

உதடுகளில் ஈரம் உணர்ந்தான் மதி.

கண்களில் மின்னல் வெட்டியது.

திடுக்கிடலோடு விழித்துக்கொண்டான்.

பாலத்தில் மல்லார்ந்திருந்தவன் கண்களில் வானம், பரந்து தெரிந்தது.

மேகத்தின் பிடியில் சிக்கியிருந்தது நிலவு.

மீண்டும் கன்னத்தில் ஈரம்.

மழை.

விரலால் உதடுகளை ஒருமுறை தடவிக்கொண்டான்.
மனதுக்குள் புரண்டது. பழநி பாரதியின் கவிதை.

'ஒரு
விளக்கேற்றுவதுதான்
முத்தம்.
ஆனால், விளக்கைப்போல
சட்டென்று
ஊதியணைக்க முடியாது.
கொடுக்கும் முத்தத்தைவிட
லேசானது
வாங்கும் முத்தம்.
ஆனால்,
லேசாக
வாங்கிவிட முடியாது.'

–கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து, காது தொட்டது.

எழுந்து அமர்ந்தான் மதி.

புகை கக்கி போனது வாகனம் ஒன்று.

பெரிய பெரிய துளிகளாய் மழையை பூமிக்கு அனுப்பியது வானம்.

"வீட்டுக்குப் போகலாம்" –என்று உதடுகள் முணுமுணுத்தன.

'எங்கே இருக்கிறது உனக்கு வீடு' –கேள்வியை சாட்டையாய் வீசியது இதயம்.

மவுனமாய் தன் அறை இருந்த இடம் நோக்கி நடந்தான் சற்று நொண்டியபடி.

அணிந்திருந்த சட்டை வட்டவட்ட பொட்டுகளாய் நனைந்தது.

–அன்று முத்தம் வாங்கிய உதடுகள் இன்று காயம் சுமந்திருந்தன.

காயம்பட்ட எரிச்சல் இதயம் வரை வலித்தது.



விடுதி காவலாளி தனது முகத்தில் குத்தியது நினைவில் வந்தது.

'நீ முத்தம் தந்த உதடுகளை எவனோ காயப்படுத்தி விட்டானே முத்துரெத்னா...' –உடம்பெங்கும் வலித்தது. நடப்பது அதிக வேதனை தந்தது.

குளிர் சுமந்த காற்று மூச்சுக்குள் கலந்து உள்ளுக்குள் புகுந்தது.

ஏதோ கனத்துக்கிடப்பது போல் உணர்ந்தான்.

வயிறு பசித்தது.

அருகே இருந்த கட்டிடத்தை நெருங்கியவன்– திடுக்கிட்டு போய் நின்றான்.

அதிர்ச்சி கண்களைத் தாக்கிற்று.

மாடிப் படியருகில் நின்று கொண்டிருந்தது–
போலீஸ் ஜீப் ஒன்று.

சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.

## 6

**கனவுகள் மறக்க கூடியவையே. ஆனால் நினைவுகள் அப்படியல்ல... அவை மறக்க விரும்பும் நேரத்தில் – தலை விரித்து ஆடத் தொடங்கும்.**

**–கவிஞர் கண்ணதாசன்.**

'**கா**வல்' என்று நெற்றியில் எழுதியிருந்த ஜீப் நின்று கொண்டிருந்தது, அவன் பார்வை தொட்ட இடத்தில்.

ஒரு நிமிடம் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து போய் நின்றான் மதி. ஜீப்பை தாண்டித்தான் மாடிப்படிகளில் ஏறி, அறைக்குச் செல்ல வேண்டும்.

'என்னசெய்வது...? எதற்காக போலீஸ் ஜீப் இந்த இடத்தில் வந்து நிற்கிறது? யாரைத் தேடி வந்திருக்கிறது- ம்.. என்னைத்தானா தேடிவந்திருக்கிறதோ...? என்னை ஏன் தேடி வரவேண்டும். சின்னதுரை கையில் போதை பார்சலை கொடுத்துவிட்டு பின்னாலே போலீசை அனுப்பி வைத்துவிட்டானா? அவன் ஏன் அப்படி செய்யவேண்டும்? அவன் அயோக்கியனிலும் அப்படிப்பட்ட அயோக்கியன் இல்லை. ம்... சின்னத்துரைக்கு தேவை பணம்தான். ஏன் போலீஸ் இங்கு வந்து நிற்கவேண்டும்! -நெஞ்சு நிறைய தயக்கத்துடன் நின்றுகொண்டிருந்தான் மதி.

அடுத்த விநாடி-

மீண்டும் அதிர்ச்சி தாக்கிற்று.

காக்கிச் சட்டைகளுக்கு நடுவில் வெள்ளை வேஷ்டி தெரிந்தது.

ஜீப்பிலிருந்து வரிசையாய் காக்கிச் சட்டைகள் இறங்கின. கடைசியாய்...

வெள்ளை வேஷ்டி இறங்கியது.

அது... அது...

முத்துரெத்னாவின் அப்பா.

அவர் அருகில் நின்ற இன்ஸ்பெக்டரிடம் விரல் நீட்டிக் காட்டினார்.

விரல் காட்டிய இடத்தில்-

இவன் அறை.

எல்லாம்... எல்லாம் புரிந்து போயிற்று மதிக்கு.

மகளிடம் வம்பு செய்ததாக கூறி போலீஸை அழைத்து வந்திருக்கிறார்.

ஒலியில்லாத ஒளிப்படமாய் தெரிந்தது இன்ஸ்பெக்டரின் கையசைப்பும், வாயசைப்பும்.

போலீஸ்காரரர் ஒருவர் படிகளில் வேகமாய் ஏறிவிட்டு, நிதானமாய் இறங்கி வந்தார்.

அவருடைய செய்கை கதவு பூட்டியிருப்பதை சொல்வது



போலிருந்தது.

எங்கிருந்தோ வேகமாய் மூச்சிறைக்க வந்து போலீசார் எதிரில் நின்றார், அந்த கட்டிடத்தின் உரிமையாளர் சிவசாமி. முகத்தில் பயம் ஒட்டியிருந்தது.

'இனி இங்கு ஒரு நிமிடம் தாமதிப்பதும் ஆபத்து' -பூனை போல் நகர்ந்து அடுத்த தெரு வந்தான்.

இன்னும் பயம் தொடரவே, நான்கு சந்து, இரண்டு தெரு கடந்து அந்தச் சாலையோர இட்லிக்கடை முன்வந்து நின்றான், கவலையுடன்.

இட்லியைப் பார்த்ததும் வயிறு 'பசிபசி'என்று அலறியது.

சட்டைப்பையை தடவினான்.

வழவழப்பாய் தட்டுப்பட்டது.

அது-

முத்துரெத்னாவின் புகைப்படம்.

இதயம் வலித்தது.

'இதயத்தை கடிக்கிறாயா முத்துரெத்னா...?'

"சார்... உங்களுக்கு எத்தனை இட்லி...?" -கடைக்காரன் குரலில் கலைந்தான்.

"மூணு... நாலு..."

"மூணா, நாலா சார்...?"

"அஞ்சி" -மதியை ஒரு மாதிரியாய் பார்த்துவிட்டு தட்டில் இட்லியை வைத்து- அதன் தலையில் சாம்பாரையும், சட்னியையும் ஊற்றி கையில் கொடுத்தான். இட்லி ஒரு துண்டு பிய்த்து வாயில் வைத்தான், மதி.

எதிரில் வந்துகொண்டிருந்தது போலீஸ் ஜீப்.

அவசரமாய் முகம் திருப்பி நின்றான்.

ஜீப் அவன் நின்றுகொண்டிருந்த இடத்தைக் கடந்ததும் திரும்பிப் பார்த்தான்.

காக்கிச் சட்டைகளுக்கிடையில் வெள்ளை தெரிந்தது.

'ஆள் இல்லையென்றதும் திரும்பி போய்விட்டார்கள்...' -அசுர வான்கோழியாய் இட்லியை விழுங்கிவிட்டு, அறையை நோக்கி நடந்தான்.

நடக்க சிரமமாயிருந்தது. கால்கள் தடுமாறின.

காதலி கனத்துக் கிடந்தாள், ஆம்...

சட்டைப்பைக்குள் இருந்த முத்துரெத்னா கனத்துக் கிடந்தாள்.

காகிதம் கனத்துக்கிடக்குமா... கனத்துக்கிடந்தது.

நேரம் இரவு பதினொன்றை தொட்டிருந்தது.

குட்டிகுட்டியாய் மழைத்துளிகளை விசிறிக்கொண்டிருந்தது வானம்.

வடகிழக்கு பருவகாற்று குளிர் சுமந்திருந்தது.

அறை இருந்த கட்டடத்தை நெருங்கியிருந்தான்.

கட்டடம் இருட்டின் பிடியில் சிக்கியிருந்தது.

'எல்லோரும் தூங்கி கொண்டிருப்பார்கள்.'

போலீஸ் ஜீப் அங்கும் இங்கும் ஓடி பூமியை ரணப் படுத்தியிருந்தது.

சேறும், சகதியுமாய் 'டயர்'தடங்கள்.

'இருட்டுப் படிகளில் பாம்பு கிடந்தால்... சந்தோஷமாய் செத்துப்போகலாம்' –படிகளில் ஏறிப்போனவனை தடுத்து நிறுத்தியது ஒரு முரட்டுக்கரம்.

இதயம் அதிர்ச்சி வாங்கியது.

பயத்துடன் திரும்பினான்.

இருட்டில் நின்றுகொண்டிருந்தார்– அந்த கட்டிடத்தின் உரிமையாளர் சிவசாமி.

"தம்பி நீங்க காலேஜுக்கு போற மாதிரியும் தெரியல்ல... வெளியூர் பையன் மாதிரியும் தெரியல்ல... குடும்பம் இருக்கிற இடத்துக்கு போலீஸ் தேடிவர்றது சரியில்லை. நீங்க யாரோ ஒரு பொண்ணை... வேண்டாம் தம்பி. அறையை காலி பண்ணிடுங்க" –பதில் பேசாமல் மவுனமாய் படிகளில் ஏறத் தொடங்கினான் மதி.

"என்ன தம்பி பேசாம போனா எப்படி...?" –குரலில் கோபம் மிதந்தது.

"முடிச்சுக்கலாம்" –ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு, கதவு திறந்து உள்ளே நுழைந்தான்.

இருட்டு பயமுறுத்திற்று. விளக்கைப் போட்டான்.

வெளிச்சம் துன்பமாயிருந்தது.



படுக்கையில் மல்லார்ந்து விழுந்தான்.

விசிறி தலையில் அறுந்து விழுந்துவிடுமோ என்று பயமா இருந்தது.

இதயம் வேகமாய் துடிப்பதாய் உணர்ந்தான்.

தொட்டுப்பார்த்தான்.

தட்டுப்பட்டாள் முத்துரெத்னா. அதை வெளியே எடுத்தான்,

சிரித்தாள். சிநேகமான சிரிப்பு.

"நீ சிரித்துக்கொண்டே இருக்கவேண்டும்... முத்துரெத்னா நீ சிரித்துக்கொண்டே இருக்க வேண்டும்... உன் கண்களில் கண்ணீர் வரக்கூடாது..." –கையிலிருந்த படத்தை அருகில் வைத்தான்.

கண்மூடினான் ஆயாசமாய்.

கண்ணுக்குள் வெளிச்சம் உறுத்திற்று. சட்டைப்பைக்குள்ளோ காகிதம் உறுத்திற்று.

காதல் கடிதம்.

வெளியே எடுத்தான், தயக்கமாய். காகிதத்தின் இறுக்கம் தளர்த்தினான்.

நீலநிற எழுத்துகள் தலையசைத்து கேலி செய்வது போலிருந்தது.

காதல் சின்னங்கள் பச்சோந்திகளாய் நிறம் மாறி இருப்பது போல் கண்ணுக்கு தெரிந்தது.

அந்தக் காகிதம் ரத்தம் குடிக்கும் வவ்வாலாய் படபடத்தது.

'அன்பே மதி...' –என்றழைத்தது காகிதம், கிசுகிசுப்பாய்.

அந்த அழைப்பு பாசாங்காய் பட்டது.

இருந்தும் இருநூற்றி எழுபத்தெட்டாவது முறையாய் படித்தான்.

முத்துரெத்னா எழுதிய முதல் காதல் கடிதம்.

மதி பெற்றுக்கொண்ட முதல் காதல் கடிதம்.

**'அன்பே மதி...**

**இப்படி நான் அழைக்கலாமா...?**

**அழைக்கலாம் என்று உன் கண்கள் சொல்கின்றன.**

**முதன்முதலாய்-**

காதலை பெண் வெளிப்படுத்தலாமா...?
சொல்லிவிடு என்று என் இதயம் சொல்கிறது.
சொல்லிவிடுகிறேன்.
நான் காதலிக்கிறேன்.
மதியை... அறிவுமதியை காதலிக்கிறேன்.
அறிவை கேட்கவில்லை, ஒரு வார்த்தை.
மதியை நாடவில்லை ஒரு நிமிடம்.
முகம் பார்த்தே காதலிக்கிறேன்.
என்றாவது ஒரு விநாடியில்-
நம் காதலின் முகத்தை அழித்துவிடாதே.
விரும்புகிறேன்-
காதலுடன் மரித்துபோகவே!
பதிலாய் காகிதம் வேண்டாம்.
நீயே வந்துவிடு.

காதலுடன்
முத்துரெத்னா.'

–எழுத்துகள் இதயத்துக்குள் அத்துமீறி நுழைந்து துவம்சம் செய்தன.

இதயம் வலித்தது. சுவாசப்பைகள் துடித்தன. ரத்தம் தத்தி தத்தி ஓடியது.

கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து, காது விளிம்பு தொட்டது.

சட்டென்று எழுந்துகொண்டான், மதி.

கண்ணீருக்கிடையில் 'காலண்டர்' பிள்ளையார் மங்கலாய் தெரிந்தார்.

மீண்டும் கண்ணீர் வழிந்து உதடுகளை தொட்டது.

கண்ணீர் உப்பாய்... காதலின் உப்பாய்...

கையிலிருந்த காகிதம் நழுவி தரையில் விழுந்தது.

மின்விசிறி காற்று அந்தக் காகிதத்தை மூலையில் தள்ளியது.

மூலையில் தலை உடைந்த கண்ணாடி குப்பிகள்... பஞ்சு



துணுக்குகள்– சிரிஞ்ச்– கிழிந்த துணி– குப்பைகள்– அருகில் காதல் கடிதம்.

'குப்பையோடு குப்பையாய் நம் காதலை வீசிவிட்டாயே மதி...' –புகைப்படத்திலிருந்த முத்துரெத்னா கண்ணீருடன் கேட்பதுபோல் மனதுக்குப்பட்டது.

'மன்னித்துவிடு முத்துரெத்னா, மன்னித்துவிடு– நம் காதலின் முகம் அழித்தவன் நான்தான்– நீ மரித்துப்போகக்கூடாது–' ஓடிப்போய் காதல் கடிதத்தை எடுத்து பத்திரப்படுத்தினான், தலையணைக்கு அடியில்.'

அந்தக் குளிரிலும் வியர்வையில் சட்டை நனைந்து போயிருந்தது.

சட்டையைக் கழற்றி கட்டிலில் வீசினான்.

பேண்ட்டுக்குள் சிறைப்பட்டிருந்த பனியனை உருவினான்.

பனியனுக்குள் இருந்து நழுவி தரையில் விழுந்தது, மூலைகளில் மஞ்சள் தடவிய உறை.

குனிந்து கையில் எடுத்தான். விரல்கள் நடுங்கின.

முகப்பு 'திருமண அழைப்பிதழ்' என்றது.

'அக்காவுக்கு திருமணம்... பாவி நான் நகையை...'

உதடு கடித்து அழுகையை அடக்கினான்.

உறையிலிருந்து அச்சான காகிதத்தை உருவினான்.

முதுகு ரோஜா நிறத்திலும், வயிறு மஞ்சளுமாய் இருந்தது.

மனதுக்குள் வார்த்தைகள் ஓடின– தலையில் அடித்து அழுதான்.

ரொம்ப நேரம் அழுதான் அழுதான் கண்ணீர் வடிய வடிய அழுதான்.

கண்ணதாசன் வார்த்தைகள் நிஜமாயிற்று.

'தனியாக உட்கார்ந்து கொஞ்சநேரம் பழைய பாவம் எதையாவது நினைத்து அழுதுபாருங்கள்.

ஈரத்தைப் பிழிந்த வேட்டிபோல் மனம்கனமில்லாமல் இருக்கும்' –கண்ணீரை துடைத்துக்கொண்டு எழுந்து நின்றான்.

இதயத்தின் சுமை குறைந்தது போல் உணர்ந்தான்.

அதே நேரம் உள்ளேயிருந்த மிருகம் உறுமியது. அதற்கு பசிக்க ஆரம்பித்திருந்தது.

'காலடியில், கிடப்பதை தந்தாலென்ன...' –அதற்றியது உள்ளே தவித்துக்கொண்டிருந்த மிருகம்.

அவசர அவசரமாய் அட்டைப்பெட்டியிலிருந்து சிறிய கண்ணாடிக்குப்பி ஒன்றை வெளியில் எடுத்தான். அதன் தலையைத் திருகி, திரவத்தை சிரிஞ்சியின் வயிற்றுக்குள் உறிஞ்சி, தன் உடம்புக்குள் ஏற்றிக்கொண்டான்.

சில விநாடிகளில் தொண்டைக்குழியில் உணர்ந்தான். அப்படியே அறையை ஒரு சுற்று சுற்றி வந்தவன் கண்களில், படுக்கையில் கிடந்த முத்துரெத்னாவின் படம்பட்டது. கோபத்தில் உதடு துடித்தது.

"ஏய்... ஏய் சிரிக்கவா செய்றே... ஆளைவச்சி அடிச்சிட்டு சிரிக்கவா செய்றே... என்னைக் காதலின்னு உன்னை நான் சொன்னேனா... சொல்லு... ம்... சொல்லு..." –படத்தை எடுத்து நான்கு துண்டுகளாய் கிழித்து தரையில் வீசினான்.

"தொலைஞ்சிபோ... தொலைஞ்சிபோ..."

–விளக்கை அணைத்தான்.

இருட்டு ஓடிவந்து இறுக்கி பிடித்துக்கொண்டது.

## 7


**இரவு– பகலென்னும் சதுரங்கப் பலகையிலே மனிதர்களைக் காயாக்கிக் கொண்டு விளையாடும் சூதாட்டம்தான் வாழ்வு.**

**–உமர்கயாம்.**

இருட்டோடு இருட்டாய் படுக்கையில் போய் விழுந்தான், மதி.

'நான் ஏன் இப்படி ஆகிப்போனேன்... நான்... நன்றாகத்தானே இருந்தேன்... எந்த நிமிடம் இந்த மிருகம் எனக்குத் தெரியாமல் என்னுள் வந்து அமர்ந்தது... இந்த மிருகத்தை இனி துரத்தவே





முடியாது. இந்த மிருகம்தான் என்னை கல்லூரியைவிட்டு துரத்தியது. ஒரு மழை நாளில் என்னை வீட்டைவிட்டு துரத்தியது. என் காதலி முத்து ரெத்னாவின் இதயத்தில் இருந்து என்னை துரத்தியது... கடைசியில் உலகத்தைவிட்டே துரத்தி அடித்துவிடுமோ...'

-புரண்டு புரண்டு படுத்தான். உறக்கம் கண்களை இழுத்தது.

கண்களை மூடவிடாமல் கண்ணுக்குள் எட்டிப் பார்த்தாள் முத்துரெத்னா. எதையோ உள்ளுக்குள் தேடின அவள் கண்கள்- எழுந்து ஓடிவிடவேண்டும் போலிருந்தது. ஓடவிடாமல் குறுக்கே வந்து நின்றார் முத்துரெத்னாவின் அப்பா. கையில் அரிவாள் வைத்திருந்தார். வேட்டியை மடித்துக் கட்டியிருந்தார். விரல்நீட்டி- 'கோட்டிக்காரன்... கோட்டிக்காரன்...' என்றார்.

தலையில் அடித்து அழுதாள் அம்மா- கண்ணீர் வழிய வழிய ஓடிவந்தாள் அக்கா சரஸ்வதி. காதில், கழுத்தில் கைகளில் பொட்டு தங்கம் இல்லை. 'போய்விடு... போய்விடு...' என்றாள் பயத்துடன். கொஞ்சம் கொஞ்சமாய் தூக்கத்தின் ஆழத்துக்குள் அமிழ்ந்துபோனான். தூக்கத்தில் கரிய இருட்டும், தூய வெண்மையுமாய் கனவுவந்தது. கூடவே, குதிரை வந்தது. நேற்று வந்த அதே வெள்ளைக் குதிரை. பால்வண்ணக் குதிரை. அசரவைக்கும் அழகு. ஆனால், அந்த அழகில் ஆபத்து மினுக்கியது. ஆசையாய் அழைத்துச்சென்று முள் மரத்தில் மோதியது, இந்த வெள்ளைக் குதிரைதானே... அழகுக்கு பின்னால் ஆபத்து ஒளிந்திருக்கிறது.

குதிரை ஒய்யாரமாய் வால் சுழற்றியது. அதன் தலை அசைப்பில் அழைப்பு இருந்தது. அருகில் வந்து 'என் முதுகில் ஏறிக்கொள்... என் முதுகில் ஏறிக்கொள்' என்று பாவனை செய்தது.

'நானா ஏறுவேன்... அந்த வெள்ளைக் குதிரை என்னை தலைகிழாய் தள்ளியது மறந்தாபோயிற்று? குதிரையோ வெள்ளை... அதன் இதயமோ கறுப்பு...'



முகம் பார்த்து சிரித்தது. அந்த சிரிப்பில் கள்ளத்தனம் இருந்தது. பற்கள்... பற்கள்... வாய் முழுவதும் பற்கள். பயமுறுத்திற்று. கால்மாற்றி நடனம் ஆடியது. எனக்கு சந்தோஷம் வரவில்லை. பயமே வந்தது. குதிரையின் நடனத்தில் அழைப்பு இருந்தது. உடம்பை உடம்பால் உரசியது.

பயத்தில் எழுந்து ஓட ஆரம்பித்தான்.

"டக்...டக்...டக்..." குதிரை பின்னால் ஓடி வருகிற சத்தம் கேட்டது.

'ஐயோ... விரட்டிக்கொண்டு வருகிறதே...'

குதிரையோடு போட்டி போட்டுக்கொண்டு பயமும் துரத்தியது.

ஓடினான்... ஓடினான்... கனவின் ஓரத்துக்கே ஓடினான்.

டக்... டக்... டக்... குதிரை துரத்துவதை நிறுத்தவில்லை.

திரும்பி பார்த்தான் கலக்கமாய்.

அதிர்ச்சி வந்து தாக்கிற்று.

அதே... அதே... பால்வண்ணக் குதிரை.

தலை... தலை மட்டும் உருமாறியிருந்தது. கழுதைப்புலியின் தலையாய்.

யோசிப்பதற்குள் முதுகை கடித்திருந்தது.

அவனுக்கு வலிக்கவில்லை.

மிருகமோ அலறியது.

திடுக்கிட்டு விழித்துக்கொண்டான் மதி.

அந்தக்குளிரிலும் வியர்த்துபோயிருந்தான் உடம்பு நடுங்கியது.

நடுக்கத்தை அதிகப்படுத்துவதுபோல அந்த உறுமல் சத்தம் கேட்டது.

நான்கு சக்கர வாகனத்தின் உறுமல்.

மூளை விழித்துக்கொண்டது அவசரமாய்.

சட்டென்று படுக்கையிலிருந்து குதித்து இறங்கினான்.

ஓடிப்போய் சன்னல் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான். போலீஸ் ஜீப்.

திறந்த வேகத்தில் சன்னலை மூடினான்.

'என்ன செய்வது... போலீஸ் கையில் சிக்கிக்கொள்ளக் கூடாது... அறையை பூட்டிவிட்டு ஓடவேண்டியதுதான்... எப்படி ஓடமுடியும்...? படிகளின் வழியேதானே இறங்கியாக வேண்டும்- கீழே தயாராய் போலீஸ் நிற்கிறதே... என்ன... என்ன செய்வது...' -போலீஸ் ஜீப் உறுமலை நிறுத்தியிருந்தது.

மின்னல் வேகத்தில் அறையைவிட்டு வெளியேறி, கதவைப் பூட்டினான். அடுத்த விநாடி- படிக்கட்டின் பாதுகாப்பு சுவரில் கால் ஊன்றி, பக்கத்து மாடிக்கு தாவினான் உயிர்வெறுத்து.

காற்றைக் கிழித்துக்கொண்டு பக்கத்து கட்டடத்தின் மேல் தளத்தில் விழுந்தான் குறிதவறாமல். அதே வேகத்தில் எழுந்து- அருகிலிருந்த குட்டி தண்ணீர்தொட்டி பின்னால் போய் ஒளிந்துகொண்டான். இதயம் வலித்தது.

அதற்குள் யாரோ படிகளில் ஏறிவரும் சத்தம் கேட்டது.

தலை தூக்கிப் பார்த்தான்.

மதியின் அறையை குறிவைத்து ஒரு போலீஸ்காரர் படிகளில் ஏறிவந்து கொண்டிருந்தார்.

கீழே எட்டிப்பார்த்தான், நடுக்கத்துடன்.

படிகளுக்கு நேர் கீழே நான்கைந்து காக்கிச்சட்டைகள் நின்றுகொண்டிருந்தன.

அவர்களுக்கு முன்னால் மடித்துக்கட்டிய வேட்டியுடன் முத்துரெத்னாவின் அப்பா.

மேலே வந்துசேர்ந்திருந்தார் போலீஸ்காரர்.

பூட்டியிருந்த கதவை நெருங்கியவர், பூட்டை ஒருமுறை இழுத்துப் பார்த்தார். திருப்தி அடைந்தவராய் கீழே பார்த்து சத்தமாய் சொன்னார்.

குரல் எதிரொலித்தது ஒருமுறை.



"ஆள் இல்லை. பூட்டு தொங்குது சார்."

"கத்தாதே கீழே இறங்கி வா" -எரிச்சலுடன் வந்தது இன்ஸ்பெக்டரின் குரல்.

படிகளில்இறங்க முற்பட்ட போலீஸ்காரர், இழுத்து பிடித்ததுபோல் நின்றார்.

அறையின் கதவோடு கதவாய் ஒட்டிக்கொண்டார் ஒரு நிமிடம்.

"என்னய்யா மேலே என்ன செய்றே...?"

"உள்ளே 'பேன்' ஓடிக்கிட்டிருக்குது..."

"முதல்ல பூட்டை உடையுங்க" -கோபமாய் வந்தது முத்துரெத்னாவின் அப்பா குரல்.

எல்லாரும் படிகளில் தடதடத்தது மேலே வந்திருந்தார்கள்.

தலையில் அடித்துக்கொண்டான், மதி.

அடுத்த சில நிமிடங்களில்-

பூட்டை உடைத்து, கதவு திறந்து உள்ளே நுழைந்தார்கள்.

திகைப்புடன் காத்திருந்தான் மதி.

விநாடிகள் கரைந்தது- நிமிடங்களுக்குள் புதையுண்டன.

முதல்ஆளாய் இன்ஸ்பெக்டர் வெளியே வந்தார்.

அவர் கையில் மடிக்கப்பட்ட காகிதம் இருந்தது.

மதி உயிராய் பாதுகாத்த முத்துரெத்னா எழுதிய கடிதம்.

தொடர்ந்து போலீஸ்காரர் ஒருவர் மதியின் சூட்கேஸை தூக்கிக்கொண்டு வந்தார்.

அவருக்கு பின்னால் வந்த போலீஸ்காரரின் இரண்டு கைகளிலும் அட்டைப்பெட்டி.

அது- போதை மருந்து சுமந்த அட்டைப்பெட்டி.

'ஐயோ' -என்று அலறியது மதியின் உள்ளே இருந்த மிருகம்.

சின்னதுரை பங்களாவிலிருந்து- அக்காவின் நகைகளைக் கொடுத்து மதி வாங்கிக்கொண்டு வந்த அதே அட்டைப் பெட்டிகள்... உயிரை கொஞ்சம் கொஞ்சமாய் உறிஞ்சிக்

அடுக்கும் அட்டைப்பெட்டிகள்- போதை சுமக்கும் கண்ணாடிக் குப்பிகளைக் காக்கும் அட்டைப் பெட்டிகள். கடைசியாய்... கடைசியாய்- முத்துரெத்னாவின் அப்பா வந்தார்.

அவர் கையில்...அவர் கையில்...

கிழிக்கப்பட்ட முத்துரெத்னாவின் முகம் இருந்தது.

புகைப்பட துண்டொன்ற வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்தார்.

முத்துரெத்னாவின் உறைந்த சிரிப்பு, மதியின் கண்களுக்கு தெரிந்தது.

"விடக்கூடாது- இந்த கோட்டிக்காரப் பயலை விடக்கூடாது" -உதடுகள் கோபத்தில் துடிக்க சத்தமாய் சொன்னார்.

இனி நடக்கப்போவது எல்லாம் மதிக்கு புரிந்து போயிற்று.

பெண்கள் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்து இளம்பெண்ணை கற்பழிக்க முயற்சி... தடுத்த காவலாளியை தாக்கிக்கொல்ல முயற்சி- போதைப்பொருள் பதுக்கிவைத்து- கடத்த முயற்சி- பணம் பாதாளம்வரை பாயும்... சட்டம் விரல்நீட்டி குற்றம் சாட்டும்... இனி அறைக்கு திரும்பிபோகமுடியாது. பெட்டியில் முத்துரெத்னா கடிதங்கள் இருக்கிறதே...' -கீழே என்ன நடக்கிறது என்று தலை உயர்த்தி பார்த்தான்.

"ஐயா எதிர்த்த மாடியில தலை தெரியுது... அவனாத்தான் இருக்கும்" -பதற்றமாய் கத்தினார் ஒரு போலீஸ்காரர்.

திபுதிபுவென்று காக்கிச்சட்டைகள் படிகளில் ஏறி ஓடிவந்தன.

அந்த நிமிடத்தின் இறுதியில் மின்னலாய் ஓடி-

அடுத்த கட்டடத்துக்கு தாவிக் குதித்து, விழுந்து, பின் எழுந்து ஓடி-

மழை நீர் குழாயில் சறுக்கி- தரைதொட்டு-

அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில்-

மீண்டும் ஓட ஆரம்பித்தான் எதிர் திசையில்.

ஓட்டம் தொடர்ந்தது.



காக்கிச் சட்டைகள் துரத்தி துரத்தி தேடியது.

துரத்தல்கள் தொலைந்து போயிருந்தது.

இரவு தன் கடைசி அத்தியாயத்தை எழுதிக்கொண்டிருந்தது. முன் இரவு அமர்ந்திருந்த அதே பாலத்துக்கு வந்து சேர்ந்திருந்தான், மதி. மிகவும் களைத்துப் போயிருந்தான். ஓடி ஓடி இதயம் வலித்தது.

கால் பெருவிரல் வலியின் 'விண்...விண்'னென்று தெறித்தது.

அந்தச் சாலைஎந்த போக்குவரத்தும் இல்லாமல் அமைதியாய் இருந்தது.

ஆற்றுப்பாலத்தில் சிரமமாய் அமர்ந்தான்.

கூவத்தின் வழக்கம்மாறாத துர்நாற்ற காற்று மூச்சில் கலந்து சங்கடப்படுத்தியது.

கண்களைத் திருப்பி கூவம் ஆற்றைப் பார்த்தான்.

சாலையோர மஞ்சள் விளக்கொளியில் ஆற்றின் மேற்பரப்பு அழகாய் இருந்தது.

உள்ளுக்குள் இருக்கும் அழுக்கை வெளியில் காட்டாத பாசாங்கு அச்சுறுத்தியது.

நகர்தலை வெளிக்காட்டாமல் நகர்ந்துகொண்டிருந்தது அந்த ஆறு.

குனிந்து ஒரு கல்லை எடுத்து ஆற்றின் மேற் பரப்பில் வீசினான்.

கல்விழுந்த இடத்தில் ஆறு காயப்பட்டது.

சலன வளையங்களை வெளிக்காட்டாமல் மீண்டும் உடம்பை தேற்றிக்கொண்டது.

கொஞ்சநேரம் படுக்கவேண்டும் போலிருந்தது மதிக்கு.

அப்படியே பாலத்தில் மல்லார்ந்து படுத்தான்.

கண்முன் விரிந்து கிடந்த வானம் இருட்டாய் இருந்தது.

மஞ்சள் நிலவையும், கண் சிமிட்டும் நட்சத்திரங்களையும் காண முடியவில்லை.

மழை மேகங்களின் அணிவகுப்புக்குள் சிக்கியிருக்க வேண்டும்.

மின்னல் வெட்டி இடி இடித்தது.

எந்த நிமிடமும் மழை கொட்டக்கூடும்.

மேகத்தை உற்றுப்பார்த்தான்.

யாரோ ஒரு இளம்பெண் கூந்தலை விரித்துப் போட்டிருப்பது போல கண்ணுக்கு தெரிந்தது.

அந்த—அந்த கூந்தலுக்குள் ஒளிந்திருந்தது ஒரு முகம்.

அது– அது... முத்துரெத்னாவின் முகம்.

அந்த முகம்சோகத்தின் பிடியில் சிக்கியிருந்தது.

கண்கள் கலங்கி–நிறம்மாறி– கண்ணீரால் நிரம்பி இருப்பது போலிருந்தது.

எந்த விநாடியும் கண்ணீர் சிந்தும்...

ஒரு துளி மெல்ல மதியின் முகத்தில் விழுந்தது –கண்களை மூடினான் ஆயாசமாய்.

இமைக்குள் வந்து நின்றாள் முத்துரெத்னா, கண்ணீருடன்.

நனைந்த இமைகள்.

கண்களை திறந்தான் தயக்கமாய்.

வடகிழக்கு பருவகாற்று ஈரம்சுமந்து திரிந்தது சிரமமாய்.

மீண்டும் நெற்றியில் ஒரு துளி.

மழை.

புள்ளியாம் குளிர்ச்சியை உள்வாங்கியது முகம்.

தண்ணீரை பூச்சிதறலாய் உதறத் தொடங்கியது வானம்.

'கறுப்பு மேகம் பூமிக் காதலிக்கு வரையும் ஆசை வரிகள்தான் மழை' –மழை மாதிரியே எத்தனை அழகான வரி... அழகான கவிதை மனசு...

புள்ளிகள் துளிகளாகி... மழை வேகமாயிருந்தது.

அசையாமல் படுத்திருந்தான் மதி.

நெற்றி, கண்கள், மூக்கு, உதடுகள் என்று மழை நனைத்தது.



வானத்திலிருந்து மழைத்துளி ஒன்றன்பின் ஒன்றாய் வருவதை இமைக்காமல் பார்த்து ரசித்தான்.

சின்னவயதில் மழையில் நனைந்துகொண்டே கபடி விளையாடியது நினைவில் வந்தது.

வானத்தை நோக்கி முத்துச்சிப்பியாய் வாய்திறந்தான்.

சொட்டு சொட்டாய் மழைநீர் விழுந்து– வாயும், உதடும் நனைந்தன.

ஜில்லிப்பான மழைநீர் வயிற்றுக்குள் இறங்கி, உள்ளுக்குள் நனைத்தது.

மனதுக்குள் கவிதை புரண்டது.

**'மழை பிடிக்கும்**
**என்று சொல்லிக்கொண்டே**
**குடை பிடிக்கும்**
**மானம் கெட்ட மனசு.**
**மழை சகி.**
**மழை ரட்சகி**
**மழை ராட்சஸி'**

–என்ற தாமிராவின் எழுத்துகள் வெறும் வார்த்தை விளையாட்டல்ல. நிஜம்.

சகியாய்... ரட்சகியாய் உருக்கொள்கிற மழை அன்று கவிதாயினியாம் கசிந்துகொண்டிருந்தது. மழை, சாலையில் நீராய் புரண்டது.

மழைத் துளிகளை கிழித்தது வெளிச்சக்கோடுகள்.

தொடர்ந்து நான்குசக்கர வாகனத்தின் உறுமல் கேட்டது.

'போலீஸ் ஜீப்பாய் இருக்குமோ?' –பயத்துடன் எழுந்து அமர்ந்தான்.

வந்தது கார் ஒன்று.

தண்ணீர் சிதற வேகமாய் வந்து 'பிரேக்'கிட்டு நின்றது. அதிலிருந்து நான்கைந்து பேர் வேகமாய் குதித்து இறங்கினர்

அடுத்த நிமிடம்-மதியை நோக்கி நடந்துவர அரம்பித்தனர்-மழையில் நனைந்துகொண்டே.

அவர்கள் கைகளில் உயிர் பறிக்கும் ஆயுதங்கள்.

## 8

**நீந்தத் தெரியாதவன்- ஆற்றில் விழுந்தால் ஆறுபோகும் போக்கில்தானே போயாக வேண்டும்.**

**-கவிஞர் கண்ணதாசன்.**

மழையைப் பொருட்படுத்தாமல் அவர்கள் நடந்து வந்தனர். மதி அமர்ந்திருந்த இடம். நோக்கி.

திகைப்புடன் எழுந்து நின்றான் மதி.

'யார் இவர்கள்... எதற்காக இங்கு வருகிறார்கள்?' -சிந்திக்க நேரம் கொடுக்காமல் முன்னால் வந்து நின்றனர்.

சினிமாவில் கதாநாயகனை அடிக்க வருகிற வில்லன்கள்போல தோற்றம் இருந்தது. முகத்தில் வழிந்த தண்ணீரை துடைத்தபடி ஒருவன் அருகில் வந்தான்.

"அண்ணாச்சி சொன்ன ஆள் இவன்தானா...?" -பின்னால் திரும்பி கேள்வி கேட்டான் கிசுகிசுப்பாய்.

"தெரிஞ்சிகிடுறது நல்லது" -என்றான் பின்னால் நின்றவன்.

குரலில் கட்டளை இருந்தது.

"என்னது தெரிஞ்சிக்கிடணும்...?" -மதியிடமிருந்து கேள்வி வந்தது கோபமாய்.

"உன் பேரு... பேரு" -என்றான் எதிரில் நின்றவன் சத்தமில்லாமல் சிரித்து.

"என்பேரு உனக்கெதுக்கு...?" -மீண்டும் கேள்வி கேட்டான்-கோபம் சற்றும் குறையாமல்.

வானம் மின்னல் வெட்டி- இடி இடித்தது.

"என்பேரு கோட்டைச்சாமி... என் பேரு எனக்கு பிடிக்கல...



உன்பேரை தந்தா எனக்கு வைச்சுக்கலாம்னு நினைக்கிறேன்" -என்றான் அசிங்கமாய் சிரித்து.

"என்ன விளையாடுறியா...?"

"விளையாடலாம்னு நினைக்கிறேன்" -கையிலிருந்த உருட்டுக்கட்டையை முகத்துக்கு நேரே காட்டினான்.

"என்ன- மிரட்டுறியா?" -இந்தமுறை மதி சண்டைக்கு தயார் ஆனான்.

"ஏய்... விலகு..." -மதியிடம் பேசிக்கொண்டிருந்தவனை விலக்கிக்கொண்டு ஒருவன் முன்னால் வந்தான்.

அவன் கையில் எந்தவித ஆயுதமும் இல்லை. முகத்தில்... முகத்தில்... கடுமை.

"தம்பி... நாங்க ஒரு ஆளை தேடி வந்திருக்கிறோம்.

தெரிஞ்சிகிட்றதுக்குத்தான் பேரைக் கேட்டோம்" -குரலில் சாமியார்த்தனம் தெரிந்தது.

மதி சற்று தயக்கத்துடன் பதில் சொன்னான்.

"என்பேரு மதி. அறிவு மதி."

"இவன்தான் மிதி" - என்று அலறினான் பேயின் சப்தமாய்.

எதிர்பாராத விநாடியில்-

வயிற்றில் ஓங்கி மிதித்தான் உயரமாய் இருந்த ஒருவன்

மதி மல்லார்ந்து விழுந்தான் நடுரோட்டில்.

சுற்றி நின்றவர்கள் மதியை தாக்க தயாராகியிருந்தனர்.

விழுந்த வேகத்தில் எழுந்து நின்றான் மதி ஆவேசமாய்.

கோபமாய் எதிர் தாக்குதல் தொடுத்தான்.

அந்த இடம் யுத்தகளமாயிற்று.

ஐந்து நிமிடங்கள் கரைந்த பின்-

சேறும், சகதியுமாய் கிடந்த இடத்தில் விழுந்தான் மதி ரத்தமும், தண்ணீருமாய்.

விழுந்தவனுக்கு எழுந்திருக்கமுடியவில்லை.

"கோட்டை... விட்ரு போதும்... கொடுத்த காசு தீர்ந்திடுச்சி.

அண்ணாச்சியை கொலை கேஸ்ல மாட்டிவிட்ராத..."

திரும்பி நடந்தார்கள் காரை நோக்கி- ஈரமாய், மனதில் ஈரமில்லாமல்.

அவர்கள் நடந்து செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தான் மதி.

தலையிலிருந்த வழிந்த ரத்தம் கண்களை மறைத்தது.

காற்று கோபமாய் விசிறியடித்தது.

மழை அலைக்கழித்தது.

மதி மயங்கிப்போனான்.

மருத்துவமனை. அவசர சிகிச்சைப்பிரிவு.

கால் கை, தலையில் கட்டுகளுடன் படுத்திருந்தான் மதி.

ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதுபோல கண் இமைகள் மூடிக்கிடந்தன.

ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்து பல மணி நேரங்கள் கடந்தும் மயக்கம் தெளியவில்லை.

உதடுகள் 'முத்துரெத்னா... முத்துரெத்னா' என்று சத்தமில்லாமல் அசைந்துகொண்டிருந்தன.

'குளுகோஸ் பாட்டில்' சொட்டு சொட்டாகத் தன் எடையைக் குறைத்துக்கொண்டிருந்தது. பிராணவாயுக்காக இணைக்கப்பட்டிருந்த 'வெண்டிலேட்டர்' கருவி சீராக இயங்கிக்கொண்டிருந்தது. அந்த அறையே அமைதியின் பிடியில் சிக்கியிருந்தது.

மதியை கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டு நின்றாள் நர்ஸ்.

பூட்டியிருந்த கண்ணாடி கதவுக்கு பின்னால் டாக்டர் அலெக்ஸ் தெரிந்தார்.

அவசரமாய் நகர்ந்து கதவைத் திறந்தாள், நர்ஸ்.

டாக்டர்அலெக்ஸ் உள்ளே நுழைந்தார்.

அவருக்கு பின்னால் எம.எல்.ஏ. செல்வராகவன்

காலடி ஓசைகளை மதியால் உணரமுடிந்தது.

ஆனால் விரலைக்கூட அசைக்க முடியவில்லை.

"நாடித்துடிப்பு எப்படி இருக்கு...?" -திரும்பி நர்ஸிடம்



கேட்டார், டாக்டர்.

"நார்மல்."

"வெண்டிலேட்டரை எடுத்திடலாமா...?"

"நேத்து ராத்திரி பன்னிரெண்டு மணிக்குலேசா மூச்சுத் திணறல் இருந்தது."

"கண்ணைத்திறக்கிற முயற்சிகள் எதுவும்..."

"இல்லை டாக்டர்" -நர்ஸ் தலையை குறுக்குவாட்டில் அசைத்தாள்.

சில விநாடிகள் கண்மூடி யோசித்த டாக்டர், எம்.எல்.ஏ. செல்வராகவனிடம் திரும்பினார்.

"இந்த பையனோட உடல் நிலை ரொம்ப மோசமாக இருக்குது. கோமாவுக்கு போற வாய்ப்பு அதிகமா இருக்குது. மூளையில இருக்கிற ரத்தநாளங்கள் கடுமையா பாதிக்கப்பட்டிருக்குது. இதயம் மட்டும் அது வேலையை விடாமல் செய்யுது. கிட்டத்தட்ட மூச்சுவிடுற மிஷன் மாதிரி..."

"இவன் எழுந்து நடக்கணும் டாக்டர்" -என்றார் எம்.எல். ஏ. உறுதியான குரலில்.

"அப்ப தலையில 'ஆபரேஷன்' ஒண்ணு செய்தாகணும். அதுவும் பன்னிரண்டு மணி நேரத்துக்குள்ள."

"உடனே செய்யுங்க டாக்டர்."

"சார்... இவன் யாருன்னு உங்களுக்கு தெரியாது... இவன் பேரு என்னன்னு உங்களுக்கு தெரியாது... இவன் எப்படிப் பட்டவன்னு உங்களுக்கு தெரியாது... ரோட்டோரம் யாரோ அடிச்சி போட்டிருந்தாங்கன்னு. ரத்தத்தோட இவனை கொண்டுவந்து ஆஸ்பத்திரியிலே சேர்த்தீங்க. இவனை யார் அடிச்சாங்கன்னு உங்களுக்குத் தெரியாது. எதுக்காக இவனை கொலைசெய்ய முயற்சி செய்திருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியாது. இவன் நல்லவனா, கெட்டவனான்னு உங்களுக்குத் தெரியாது... உங்க மனிதாபிமானத்துக்கு இதுவரை ஏற்பட்டிருக்கிற செலவு பதினேழாயிரம் ரூபாய். ஆபரேஷனுக்கு அறுபதாயிரம் வரை செலவாகும். அதுக்கு அப்பறமும் செலவு இருக்குது... வேண்டாம். இத்தோட விட்டுருங்க" -என்றார்

டாக்டர் அலெக்ஸ். அவர் குரலில் உயிரில்லை.

அவர் பேசுவது மதிக்கு கிணற்றுக்குள் இருந்து கேட்பதுபோல் கேட்டது. காது உணர்ந்தும், கண்கள் திறக்க மறுத்தன.

'என்னை காப்பாத்துங்க டாக்டர்' -கத்தவேண்டும் போலிருந்தது.

இதயம் இரைந்தும் உதடுகள் அசைய மறுத்தன.

அந்த அறை அந்த நிமிடம் மவுனத்தின் பிடியில் சிக்கியிருந்தது.

எம்.எல்.ஏ. செல்வராகவன் ஒரு நிமிடம் மதியின் முகத்தை உற்றுப்பார்த்தார்– இமை சேராமல் .

"இவன் கெட்டவனா இருக்க முடியாது. பணத்தோடு வர்றேன் டாக்டர்.

உடனே...உடனே... ஆபரேஷனுக்கு ஏற்பாடு பண்ணுங்க" –வார்த்தைகளை உதிர்த்துவிட்டு வேகமாய்வெளியேறினார், செல்வராகவன்.

திரும்பி மதியின் முகத்தை வியப்பாய் பார்த்தார் டாக்டர் அலெக்ஸ்.

சிறகு முளைத்திருந்தது மதியின் இதயத்துக்கு.

தலையில் 'ஆபரேஷன்' வெற்றிகரமாக நடந்து முடிந்திருந்தது.

உறங்குவதுபோல கண்மூடிக்கிடந்தான் மதி.

அருகில் நர்ஸ் மட்டும் அமர்ந்திருந்தாள்.

அவள் விழிகள் மதியின் முகத்தையே சுற்றிசுற்றி வந்து கொண்டிருந்தது.

விடிகாலையில் பூமலர்வதுபோல கண் திறந்தான்.

எதிரில்... எதிரில்... வெள்ளை உடை தேவதையா...?

சந்தேகம் வந்தது அவனுக்கு.

"நீ... நீங்கள்... நீங்கள் யார்...?"

"என்னைத் தெரிந்துகொள்வது இருக்கட்டும். நீங்கள் யார்... உங்கள் பெயர்...?"

"மதி. அறிவுமதி."

"பெயர் பிடித்திருக்கிறது."

"உங்களுக்கு ஏன் என் பெயர் பிடிக்கவேண்டும்... நீங்கள் யார்...?"

"என் பெயர் தீபிகா. நர்ஸ். இது ஆஸ்பத்திரி" -நடந்ததை வரிசைமாறாமல் சொன்னாள் நர்ஸ்.

'ஆம்...ஆம்...' என்றது உள்உணர்வு.

கதவை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தார் டாக்டர் அலெக்ஸ்.

அவருக்கு பின்னால் எம்.எல்.ஏ. செல்வராகவன்.

அவசரமாய் எழுந்துகொண்டாள் நர்ஸ்.

"பேரு அறிவுமதி சார்" -என்றாள் உற்சாகமாய்.

"அறிவுமதி. அற்புதமான பெயர்" -என்றார் டாக்டர்.

"ரொம்ப நன்றி டாக்டர்" -என்றான் மதி.

"நீங்க நன்றியை கடவுளுக்குத்தான் சொல்லனும்" -என்றார் டாக்டர், புன்னகையுடன்.

"கடவுளுக்குத்தான் நன்றி சொல்லணும்னா எம்.எல்.ஏ. ஐயா செல்வராகவனுக்குத்தான் சொல்லணும்" -என்றான் தெளிவான குரலில்.

"ரொம்ப அதிகம்" -என்றார் எம்.எல்.ஏ. செல்வராகவன்.

படுக்கையின் அருகில் நெருங்கி வந்திருந்தான்.

சட்டென்னு அவர் வலக்கையை இறுகப் பற்றிக் கொண்டான் மதி.

"என்னை யாருன்னே உங்களுக்குத் தெரியாது. என் பேருகூட உங்களுக்கு தெரியாது. நடுரோட்ல நாய் மாதிரி அடிபட்டு விழுந்த கிடந்த எனக்கு கடவுள் மாதிரி உயிர் தந்திருக்கிங்க. இந்த உயிர் இனி இருக்கும் மட்டும் உங்களுக்காகவே இருக்கும்" -என்றான் மதி, குரல் தழுதழுக்க. கண்களிலிருந்து கண்ணீர் 'மளமள' என்று வழிந்து செல்வராகவன் கையை நனைத்தது.

அவர் கண்களில் வந்திருந்தது ஒருவித நரித்தனம்.



அதே நேரம்-

கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள் ஒரு இளம்பெண்.

வயது இருபத்தைந்து இருக்கும். அழகாய் இருந்தாள்.

கண்களில் சோகம் மிதந்தது.

"அப்பா" -என்றாள் குரலை குழைத்து.

எட்டு கண்களும் திரும்பின அவசரமாய்.

"அறிவுமதி இவ என் மகள் கவிதா" -என்றார் செல்வராகவன்.

'கவிதைபோல இருக்கிறாள்' -மனதுக்குள் வார்த்தைகள் நகர்ந்தன.

"வணக்கம்" -என்றான் அவசரமாய்.

கவிதாவின் கண்கள் மதியின் கண்களைக் கவ்விக் கொண்டன.

## 9

**என்னுடைய மரணத்தில்- அழுகைச் சப்தமே இராது. அதாவது- என்னுடைய அழுகைச் சப்தம்.**

**-இளையராஜா.**

தன்னைப் பற்றி எதுவும் கூறாமல்மவுனம் சாதித்தான் மதி. எந்தக் கேள்விக்கும் விரிவான பதில் அவனிடமிருந்து யாருக்கும் கிடைக்கவில்லை. விழுந்து விழுந்து கவனித்தாள் நர்ஸ் தீபிகா. வேக வேகமாய் உடல்நலம் தேறியது. எந்த நிமிடம் சுதந்திர பறவையாய் பறக்கலாம் என்று காத்திருந்தான். அவனை அழைத்துப்போக ஆஸ்பத்திரி வாசலில் கார் வந்து நின்றது. எம்.எல்.ஏ. செல்வராகவனும், அவர் மகள் கவிதாவும் இறங்கி வந்தார்கள். கவிதாவின் கண்களைப் பார்க்க மதிக்கு பயமாயிருந்தது.

"மதி புறப்படு. நாம் போகிறோம்" -என்றார் செல்வராகவன்.

"எ..எங்கே..."-கேள்வி கேட்டான் குழப்பத்துடன்.

"நம்ம வீட்டுக்கு" –என்றாள் கவிதா.

நர்ஸ் தீபிகாவின் முகத்தில் திடுக்கிடல் தெரிந்தது. என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்துப்போய் அமர்ந்திருந்தாள். குறுக்கே வந்தார் டாக்டர் அலெக்ஸ்.

"நான்கைந்து நாட்கள் மதி இங்கு இருப்பது நல்லது."

"டாக்டர்.. அறிவுமதி குடும்ப சூழ்நிலையில் இருப்பது நல்லது என்று என் மனதுக்கு படுகிறது. நான் அழைத்துப் போகிறேன். தினமும் மதியை அழைத்து வந்து காட்டிவிட்டு போகிறேன்... சரிதானே..." –செல்வராகவனின் வேண்டுகோளுக்கு அரை மனதுடன் சம்மதித்தார் டாக்டர்.

அடுத்த நிமிடமே புறப்படுவதற்கான ஆயத்தங்கள் தொடங்கின. டாக்டர் அறைக்குச் சென்றுவிட்டார் செல்வராகவன். பணம் செலுத்தும் இடத்துக்கு கவிதா போனாள். தனிமையில் விடப்பட்டான் மதி.

சிந்தனைகள் சுழன்றன நான்கு திசைக்கும்.

'என் உயிர் உங்களுக்கு என்றேன். என்னையே கேட்கிறார்களோ.. நான் யார் என்றுகூட வாய் திறந்து ஒரு வார்த்தை இதுவரை சொல்லவில்லை. தான் எப்படிப்பட்டவன் என்று அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. எதற்காக என்னை அவர்கள வீட்டுக்கு அழைத்துப்போக நினைக்கிறார்கள்... டாக்டர் மறுத்தும் ஏன் இந்த அவசரம்? போய்தான் பார்ப்போம்... செல்வராகவன் மகள் கவிதா கண்களில் ஏன் இந்த சோகம்... எதற்காக என்னை தின்றுவிடுவதுபோல் பார்க்கிறாள்... பார்வையே அப்படித்தானோ...' –வலது காலை அசைத்தான். உயிரை இழுத்தது வலி.

'யார் என்னை அடித்தார்கள்...? என்னை ஏன் அடிக்க வேண்டும்...? அடிக்க வந்த அடியாளில் ஒருவன் 'அண்ணாச்சியை கொலை கேஸில் மாட்டிவிட்டிராதே' என்றானே... யார் அந்த அண்ணாச்சி... எனக்கு பகை ஒரே ஒரு அண்ணாச்சிதானே... முத்துரெத்னாவின் அப்பா. அவர்தான் அடியாட்களை அனுப்பி அடித்திருக்க வேண்டும். போலீஸை அனுப்பி அடித்து இழுத்துச் செல்ல திட்டமிட்டார். அது முடியவில்லை. அடியாட்களை



அனுப்பி வைத்திருக்கிறார் கோழைத்தனமாய்.. பார்த்தாயா முத்துரெத்னா.. உன் அப்பா நீ நேசித்த மனிதனை அடித்து ஒழித்து போட்டிருக்கிறார்..." –காலடி ஓசையில் சிந்தனை அறுத்தது.

அறைக்குள் நுழைந்தாள் நர்ஸ் தீபிகா.

அவள் கண்களில் அம்மாவைப் பார்த்தான் மதி.

வைசூரி கண்டு எட்டு வயதில் படுத்த படுக்கையாய் இருந்தபோது மடிக்குள் வைத்து கவனித்த அம்மாவின் நினைவு வந்தது. 'அம்மா.. அம்மா..' என்று அரற்றியது இதயம்.

அருகில் வந்திருந்தாள்.

அறைக்கதவை ஒருமுறை திரும்பி பார்த்தாள்.

அந்த பார்வையில் பதற்றம் தடவியிருந்தது.

அவள் உதடுகள் மதியின் முகத்தருகே வந்து கிசுகிசுத்தன.

"செல்வராகவனை நம்பவேண்டாம்" –அறைக் கதவை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள், கவிதா.

அவசரமாய் விலகினாள் தீபிகா.

அந்த விநாடி–

ஆறு கண்களும் அதிர்ச்சி வாங்கின.

காரணங்கள்தான் வெவ்வேறு.

"நர்ஸ்... உங்க பேர் என்ன...?" –கேள்வியில் எரிச்சல் மிதந்தது.

"தீ... தீபிகா" –என்றாள் தயக்கத்துடன்.

பதில் சொல்லி முடிப்பதற்குள் தீபிகா அருகில் வந்திருந்தாள் கவிதா.

"அறிவுமதி முகத்தில என்ன தேடுறீங்க...?" –மீண்டும் ஒரு கேள்வி வந்தது கவிதாவிடமிருந்து.

இந்தக் கேள்விக்கு தீபிகாவால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை.

"தாடையில வலி இருக்கிறதா சொன்னேன். உள் காயம் இருக்குமோன்னு பார்த்தாங்க" –அவசரமாய் பொய் சொன்னான் மதி.

"ஓ..." –என்றாள் கவிதா மெலிதாய்.

அதில் இன்னொரு அர்த்தம் தொனித்தது.

அவசர அவசரமாய் அந்த அறையைவிட்டு வெளியேறினாள் நர்ஸ். கவிதாவோட மதியை நெருங்கி கண்களைப் பார்த்து பேச ஆரம்பித்தாள்.

"அறிவுமதி... பொய் எப்போதும்..." –அதற்குள் உள்ளே நுழைந்திருந்தனர் எம்.எல்.ஏ. செல்வராகவனும், டாக்டர் அலெக்ஸுும் வேறு திசைக்கு பார்வையைத் திருப்பினாள். மதி வியர்த்திருந்தான்.

அடுத்த பத்தாவது நிமிடம்–

ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே வந்திருந்தார்கள் செல்வராகவன், மதி, கவிதா.

காரில் ஏறும்முன் ஒருமுறை திரும்பி ஆஸ்பத்திரியைப் பார்த்தான்.

சன்னலிருந்து மதியை இரண்டு கண்கள் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தன.

அந்தக்கண்கள் –நர்ஸ் தீபிகாவின் கண்கள்.

'கவனம்' என்று எச்சரித்தன.

தயக்கமில்லமல் காரில் ஏறிக்கொண்டான்.

கார் புறப்பட்டது நச்சுப்புகை கக்கி.

**மா**டி அறையை ஒதுக்கியிருந்தார்கள் மதிக்கு.

அரண்மனை விருந்தாளிக்கு அளிக்கப்படும் அத்தனை உபசரிப்பும் வழங்கப்பட்டது.

வெளியிலிருந்து அசைவ உணவுகள் வரவழைத்து பரிமாறப்பட்டது.

கவிதா ஓடிஓடிவந்து கவனித்தாள், வேலையாள் போல.

காலையிலிருந்து இரவு தொடங்கும்வரை செல்வராகவன் மாடி அறைக்கு வரவேயில்லை.

இருட்டின் பிடியில் சிக்கியிருந்தது வானம்.

எங்கிருந்தோ முளைத்திருந்தன நட்சத்திரங்கள்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்திருந்தார்



செல்வராகவன்.

"மதி வானத்திலே என்ன தேடுறீங்க...?" –சன்னலில் இருந்துபார்வையைத் திருப்பினான்.

நாற்காலியை இழுத்து மதி முன்னால் போட்டு அமர்ந்தார் எம்.எல்.ஏ. செல்வராகவன்.

"மதி.. இந்த இடம் பிடிச்சிருக்குதா.."

"பிடிச்சிருக்குது. எத்தனை நாளைக்கு..?" –அந்த வார்த்தைகள் அவருக்கு அதிர்ச்சியை கொடுத்திருக்க வேண்டும். கொஞ்ச நேரம் பேசாமலிருந்தார்.

"இங்கதான் இருக்கப்போற... நிரந்தரமா இங்கதான் இருக்கப்போற..." –என்றார் தலையை பலமாய் அசைத்து. –அதற்கு அவன் எந்தவித பதிலும் சொல்லவில்லை.

"உன் உயிர் எனக்குஎன்று சொன்னாயே.ஞாபகமிருக்கிறதா..?" –அந்தக் கேள்வி அவனுக்கு வியப்பாய் இருந்தது. இருந்தும் பதில் சொன்னான்.

"நீங்கள் எந்த நேரமும் என் உயிரை எடுத்துக்கொள்ளலாம்."

"உன் உயிர் எனக்கு வேண்டாம். எனக்காக நீ ஒரு உயிரை எடுக்கவேண்டும்."

"என்னது– உயிரை எடுக்கவேண்டுமா..?" –தலை அசைத்தார் ஆமோதிப்பாய்.

கண்களில் அதிர்ச்சி வாங்கியிருந்தான்.

"கொ...கொலையா...?" –ஒரு வார்த்தை பேசவே தடுமாறினான்.

"கொலைதான். சட்டத்தின் கண்களுக்கு கொலைதான். நிஜம் திமையை அழிப்பது."

"யாரை...யாரை...?"

"தங்க ரத்தினத்தை" –மீண்டும் அதிர்ந்தான்.

சட்டை தெப்பலாய் நனைந்திருந்தது வியர்வையால்.

"தங்கரத்தினம் உங்கள் சிஷ்யன் ஆயிற்றே" –அதற்கு பதில் சொல்லாமல் ஒரு கேள்வி கேட்டார்.

"கவிதாவைப் பற்றி என்ன நினைக்கிறே..?"

நான என்ன நினைக்கிறது...? எந்த நேரம் பார்த்தாலும் கண்ணுல ஏதோ சோகம் இருக்குது- வேற என்ன சொல்றது..."

"அந்த சோகத்துக்கு காரணம் தங்க ரத்தினம்."

"தங்கரத்தினமா... புரியும்படியா சொல்லுங்க."

அரசியலில் நான் குரு. தங்கரத்தினம் சிஷ்யன். அந்த உரிமையில் என் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவான். தங்கரத்தினம் திருமணம் ஆனவன். இரண்டு குழந்தைகள் இருக்கிறது. அவன் கவிதாவுடன் பழகுவதை நான் தவறாக நினைக்கவில்லை. ஆனால், அவனோ கவிதாவை ஓட்டலுக்கு அழைத்துச்சென்று, குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்துகொடுத்து, அவளைக் கெடுத்துவிட்டான். அதற்கு தண்டனை- நம்பிக்கைத் துரோகத்துக்கு பரிசு மரணம்தான்" -செல்வராகவனின் கண்கள் ரத்தச் சிவப்பாய் மாறிப் போயிருந்தன. உதடுகள் நடுங்கின.

வலக்கை விரல்களை இடக்கை விரல்களால் அழுத்திப் பிடித்திருந்தார்.

"எனக்காக... என் கவிதாவுக்காக செய்வாயா மதி...?"

"தங்கரத்தினத்தைக் கொல்வேன்" -என்றான் மதி, உணர்ச்சியற்ற குரலில்.

"அதுபோதும். அது எனக்கு போதும். நிம்மதியாய்... நிம்மதியாய் தூங்கு மதி" -மதியின் தலையை வாஞ்சையாய் தடவிவிட்டு, கதவு திறந்து வெளியேறினார்.

கதவு மீண்டும் பூட்டிக்கொண்டது.

'நிம்மதியாய் தூங்கவேண்டுமாம்... நிம்மதியாய் தூங்குகிற காரியம் எதை செய்திருக்கிறேன்... கடைசியாய்... கடைசியாய் நன்றிக் கடனுக்காய் கொலையும் செய்ய துணிந்துவிட்டேன்... இதைவிட இறந்தே போயிருக்கலாம்...'

மீண்டும் அறைக்கதவு திறந்தது.

உள்ளே கவிதா வந்தாள். கையில் 'டிபன்' கூடவே கோழியின் வாசம் வந்தது.

"சப்பாத்தி- மட்டன் குருமா, சிக்கன் சிக்ஸ்ட்டிபைவ்



இருக்குது.

சாப்பிட்டுட்டு தூங்குங்க" -என்றாள் கவிதா கண்களில் கனிவுடன்.

"அறிவுமதி... உங்க வலது கன்னத்தில் உள் காயம் இருக்குது. மருந்து கொடுத்தாகணும்" -சற்றும் எதிர்பாராமல் குனிந்து மதியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அந்த நிமிடம் ஆடிப்போனான்.

அடுத்த நிமிடம் கவிதாவைக் காணவில்லை.

கவிதா முத்தமிட்ட இடத்தை தடவிப் பார்த்தான்.

மரத்துப்போயிருந்தது.

கண்முன் காத்திருந்தது டிபன் கேரியர்.

பசியிருந்தும் சாப்பிட மனம் இல்லை.

படுக்கையில் மல்லார்ந்து விழுந்தான் ஆயாசமாய்.

கோவிலில் வெட்டப்போகும் ஆட்டுக்கு தின்னக் கொடுக்கும் தழையும், புல்லும் நினைவுக்கு வந்தன.

புரண்டு புரண்டு படுத்தான். உறக்கம் வரவில்லை.

சுவர்க்கடிகாரம் நேரம் சொன்னது, இசையாய்.

நேரம் இரவு ஒன்பது மணி.

கண்களைத் திருப்பி சுவரைப்பார்த்தான்.

காலண்டரில் முருகன் சிரித்தார், தெய்வீகக் குழந்தையாய்.

டிசம்பர் 23 என்றது காலண்டர்- பெரிய எழுத்துக்களில்.

தூக்கிவாரிப் போட்டது போல படுக்கையிலிருந்து எழுந்தான்.

இன்று டிசம்பர் இருபத்திமூன்று... நேற்று டிசம்பர் இருபத்தி இரண்டு சரஸ்வதி அக்காவின் திருமண நாள்- திருமணம் நடந்திருக்குமோ... இல்லை இந்தப்பாவியால் நின்றுபோயிருக்குமோ... அம்மா' -உடனே ஓடிப்போய் வீட்டை தூரத்தில் நின்றாவது பார்க்க வேண்டும் போலிருந்தது. அவசரமாய் நடந்துபோய் கதவைத் திறந்தான்.

திறக்க முடியவில்லை.

வெளியே பூட்டியிருந்தது.

# 10

**தன் ஆவியை அடக்காத மனுஷன் பாழான பட்டணம் போலிருக்கிறான்.**

**-பைபிள்.**

மதிக்கு அதிர்ச்சியாயிருந்தது.

அவன் இருந்த மாடி அறையின் கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது.

'எதற்காக வெளியே பூட்டியிருக்கிறார்கள்... வீட்டுச் சிறையா?'

மனதுக்குள் கோபம் பொங்கியது.

ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தான்.

இருட்டு பயமுறுத்திற்று.

மழைநீர் குழாய் கண்ணில்பட்டது.

சட்டென்று முடிவெடுத்தான்.

மாடிஅறை விளக்குகளை அணைத்து இருட்டாக்கினான்.

ஜன்னல் வழியே வெளியே நகர்ந்து-

மழைநீர் குழாயை பிடித்து சரசரவென்று கீழே இறங்கினான்.

சருகுகள் முனகின- கால்பட்டு.

பூனைபோல் பதுங்கி, பங்களா முன் வந்தான்.

முன்கதவு பூட்டிக்கிடந்தது.

காம்பவுண்டு கேட் அகலமாய் திறந்து கிடந்தது.

அவசரமாய் வெளியேறி சாலைக்கு வந்திருந்தான்.

அடுத்து இருபதாவது நிமிடத்தின் ஆரம்பத்தில்-

அந்த சிறிய வீட்டின் முன்னால் போய் நின்று கொண்டிருந்தான் மதி.

ஒரே ஒரு மாடி அறையைக்கொண்ட வீடு.

ஆம், மதி பிறந்த வீடு- தவழ்ந்த வீடு.

அந்த வீடு இருளின் பிடியில் சிக்கியிருந்தது.

அந்தப் பிரதேசம் மவுனத்தின் பிடியில்...



அன்று- கேட் பூட்டிக் கிடந்தது. இன்று அகலத் திறந்து-

வாசலிலிருந்த பெயர் பலகையை காணவில்லை.

உள்ளே நுழைந்தான் ஒருவித பயத்துடன்.

அன்று ஓடிவந்த நாயை இன்று காணவில்லை.

முன்கதவில் பெரிய பூட்டொன்று தொங்கியது.

வீட்டின் பின்பக்கம் வந்து கொய்யாமரத்தில் ஏறி, மாடி ஜன்னலுக்குத் தாவி அறைக்குள் குதித்தான்.

அங்கும் இருட்டுத்தான் இருந்தது. கண்களைச் சுருக்கி சுவரைப்பார்த்தான்.

சுவரிலிருந்த விவேகானந்தரைக் காணவில்லை.

மாடிப்படிகளில் இறங்கினான், படபடப்பாய்.

யாருமில்லை... எதுவுமில்லை...

அடுத்த அறைக்கு ஓடினான்.

விளக்கைப்போட்டான்.

வெறுமைதான் காத்திருந்தது. சதா சிரித்துக்கொண்டிருக்கும் முருகன் படத்தைக் காணவில்லை. அவன் முன்னால் பகல் இரவு பாராமல் எரிந்துகொண்டிருக்கும் அகல்விளக்கையும் காணவில்லை.

அருகில் இருக்கும் சிவப்பு மண் உண்டியல் இருந்த இடம் வெறுமையாய்...

ஆள் உயர பீரோ இல்லை.

அவசரமாய் சமையலறைக்கு ஓடினான்.

அங்கே அம்மாவும் இல்லை.

அம்மா தொட்ட பாத்திரங்களும் இல்லை.

'எங்கே அம்மா போய்விட்டாய்...? இந்த முட்டாள் மகனை விட்டுவிட்டு எங்கேம்மா போய்விட்டாய்...? நான் செத்தால் எனக்காக யாரம்மா அழுவார்கள்...? அம்மா... அம்மா...'

-அரவற்ற அந்த இரவில், ஆள் இல்லாத அந்த வீட்டில், தரையில் அமர்ந்து தலையில் அடித்து அடித்து அழுதான்.

கண்ணீர் வழிந்து தரையைத் தொட்டது.

அப்படியே தரையில் மல்லார்ந்து படுத்தான்.

கண்ணீர் காது தொட்டது.

பல மணித்துளிகள் கரைந்தபின் கண்ணீரை துடைத்தபடி

எழுந்துகொண்டான். வாசலுக்கு வரவும்- எங்கிருந்தோ ஆட்டோ ஒன்று வர- அவசரமாய் ஏறிக்கொண்டான்

மதியைப் பார்த்து வேகமாய் ஓடிவந்தது அம்மா வளர்த்த நாய்.

ஆட்டோ வேகமெடுத்தது. விடாமல் துரத்தியது நாய். மதி அதைக் கவனிக்கவில்லை.

மீளவே முடியாத சுழலில் சிக்கிக்கொண்டதுபோல உணர்ந்தான் மதி.

எம்.எல்.ஏ. செல்வராகவன் பங்களா- இருட்டு பாதி, வெளிச்சம் பாதியாய் இருந்தது. கேட் பூட்டப்பட்டிருந்தது. தயக்கமில்லாமல்ஏறி உள்ளே குதித்தான்.

புல்வெளி மெத்தென்று வாங்கிக்கொண்டது.

பூட்டியிருந்த கதவுக்கு முன்னால் போய் நின்றான்.

'காலிங்பெல்லை அழுத்தலாமா...? பின்பக்க வழியாய் மேலே சென்றுவிடலாமா?' -குனிந்தவன் கண்களில் தெரிந்த வெளிச்சக்கோடு-கதவு திறந்திருப்பதை அறிவித்தது. கதவைத் தொட்டான் தயக்கமாய். அகலமாய் திறந்துகொண்டது.

பூனைபோல் நடந்து உள்ளே நுழைந்தான்.

மாடிக்குச் செல்லும் படிக்கட்டு கண்ணில் பட்டது.

'மேலே போய்படுத்துக்கொள்ள வேண்டியதுதான்' -மாடிப்படிகளில் ஏறிய கால்களை இழுத்து நிறுத்தியது-

காதில் விழுந்த சிணுங்கலானச் சிரிப்பு.

வியப்புடன் கீழே இறங்கினான்.

காதுகளை கூர்மையாக்க இப்பொழுது கேட்டது கரகரப்பான ஆண் குரல்.

உடம்பெங்கும் குப்பென்று வியர்த்துவிட்டது.

கடைசி அறையிலிருந்து மெலிதான சிரிப்பு சத்தம் கேட்டது.

அந்த அறையை நோக்கி நடந்தான்.

அந்த அறை... அந்த அறை... திறந்துகிடந்தது.

உள்ளேயிருந்து கிசுகிசுப்பான பெண் குரலும், கரகரப்பான ஆண் குரலும் கேட்டது.



"இந்த ஜென்மத்துலயாவது என் கழுத்துல தாலி கட்டுவியா ரமேஷ்...?"

"இப்படி நீ துரத்திக்கிட்டு வருவேன்னு தெரிஞ்சிருந்தா நான் தற்கொலையே பண்ணி இருக்கமாட்டேனே...!"

-சீர்காழி ரேவதி.





"மாமியார்கூட நடந்த சண்டை... 'சைவமா? அசைவமா?'ன்னு கேட்கிறியே!"

"சண்டையில ரத்தம் வந்தா அசைவம். ரத்தம் வரலேன்னா சைவம்!"

-எஸ். மாரியப்பன், தேனி.

"ஏம்பா சர்வர்! தோசை மேல் இவ்வளவு பெரிய கல் கிடக்குதே... பார்க்கக்கூடாதா?"

"காற்றில் பறந்து போகாம இருக்க நான் வச்சிக்கிட்டு வந்த 'டேபிள் வெயிட்டு' சார், இது!"

-சமதி சிவசுப்பிரமணியன்,
ஆலத்தம்பாடி.



# இதயம் பேசுகிறது!

## மனதை மயக்கிய நாவல்




'மண்ணில் வந்த நிலவே' எடுத்த வேகத்தில் படித்த நெஞ்சில் நின்ற காவியம்.

**எஸ்.ஜே. ஜோதி.**

உமா பாலகுமார் எழுத்து மென்மையான உணர்வுகளை இனிய நடையில் வெளிப்படுத்தியது.

**சு. யசோதா, மதுரை.**

'மண்ணில் வந்த நிலவே' எங்கள் மனதை மயக்கியது.

**ஆர்.பி. சுந்தரி, பூனாம்பாளையம்.**

வரிக்கு வரி மனதை நெகிழ வைத்தது.

**எஸ்.எல்.பிச்சைமுத்து, சிங்கப்பெருமாள்கோவில்.**

சாகித்யாவின் சேவை மனப்பான்மையோடு, நாவல் எளிய நடையில் தவழ்ந்தது விறுவிறுப்பை தந்தது.

**சுமதி, வத்தன்காடு.**

ஒவ்வொரு அத்தியாயமும் சுவாரசியம் குறையாமல் சென்றது.

**சு.மு. சுரேஷ், தகட்டூர்.**

ஆஹா... அருமையிலும் அருமை.

**எஸ். பாலாஜி, வடக்குமாங்குடி.**

நாயகி சாகித்யா, பெண் இனத்திற்கே ஓர் பொக்கிஷமாக திகழ்கிறார்.

**ம. வசந்தா, கச்சிராயபாளையம்.**

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை–600 007.**



"அறிவுமதிக்கு அறிவே கிடையாதா...? நீங்கள் சொன்னதை அப்படியே நம்பிவிட்டான்."

"என் அரசியல் எதிரி தங்கரத்தினத்தை நான் கொலை செய்து மாட்டிக்கொள்ளக்கூடாது. அதற்குதான் அறிவுமதியை தயார் செய்தேன். நிச்சயம் உயிரை எடுப்பான்."

"அறிவுமதி போலீசில் சிக்கி உங்கள் பெயரை உளறிவிட்டால்...?"

"உளற உயிர் இருக்காது. தங்கரத்தினத்தை அறிவுமதி கொன்றதும், அறிவுமதியை நாம் கொன்றுவிடுவோம். வழக்கு அநாதையாகிவிடும். கவிக்குட்டி..."

"டேடி டேடி ஓமை டேடி... புத்திசாலி டேடி..." –முகம் ரத்த சிவப்பாகி இருந்தது.

உள்ளே எட்டிப் பார்த்தான்.

கவிதாவின் மடியில் செல்வராகவன்.

'தூ... மிருகங்களா... என்னை ஏமாற்ற தந்தை– மகள் உறவு நாடகம்தான் கிடைத்ததா?'

–சத்தமில்லாமல் பின்வாங்கி வெளியேறினான், வேகமாய்!

**ந**டந்தான்.

நடந்தான்... நடந்துகொண்டே இருந்தான்.

அவன் கால்களை இழுத்து நிறுத்தியது அந்தப் பாழடைந்த கோவில்.

இருட்டுக்குள் இருட்டாய் நின்றுகொண்டிருந்தது அந்தக் கோவில்.

சிதைந்து நொறுங்கிப் போயிருந்த கோவில் படிக்கட்டில் மிதித்து ஏறி...

வாசலுக்கு நேரே நின்று உள்ளே எட்டிப் பார்த்தான்.

மை இருட்டு. உள்ளே நுழைய பயமாயிருந்தது.

அப்படியே வாசலில் படுத்துக்கொண்டான்.

சிமெண்டு போடப்பட்டிருந்த தரை உடைந்து சிதைந்து போயிருந்தது.

மண் உறுத்தியது. இதயமும் உறுத்தியது.

கொஞ்ச நேரத்தில் தூங்கிப்போனான்.

கனவு வந்தது.

கனவில் குதிரை வந்தது.

அடிக்கடி கனவில் வருகிற வெள்ளைக் குதிரை அல்ல. தங்க நிறக் குதிரை.

அழகு... பேரழகு.

தங்க நிற ரோமங்கள், மஞ்சள் நிலவொளியில் மினுக்கியது.

குதிரை ஒய்யாரமாய் வால் சுழற்றியது.

அதன் தலையசைப்பில் அன்பான அழைப்பு இருந்தது.

திடீரென்று மழை கொட்டத் தொடங்கியது.

மழையில் நனைந்த குதிரை தங்க நிறம் கரைந்து...

அதே பழைய பொல்லா குதிரை வெளிப்பட்டது.

திடுக்கிட்டு விழித்துக்கொண்டது இதயம்.

'போதை... போதை...' –என்று அலறியது உள்ளேயிருந்த மிருகம்.

ரகசியமாய் காற்றில் கிசுகிசுப்பாய் சத்தம் மிதந்து வந்தது போலிருந்தது.

கண்கள் சிவந்து கிடந்தது உறக்கமில்லாமல்.

முகம் வீங்கிப் போயிருந்தது.

தலை ஏகமாய் வலித்தது.

அந்த நிமிடம் செத்துப் போய்விடலாம் போலிருந்தது, மதிக்கு.

'கேட்' பூட்டிக்கிடந்தது. வாசலில் யாரும் இல்லை.

சுவர் ஏறி உள்ளே குதித்தான் மதி.

ஓலமிட்டது காலடியில் சிக்கிய சருகுகள்.

கால்கள் மெலிதாக நடுங்கின.

கண்களை உயர்த்திப் பார்த்தான்.

வீட்டில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

'எங்கே போனான் சின்னதுரை...?'

–கோபம் பந்தாய் எழுந்தது.

பங்களாவை நெருங்கி 'காலிங்பெல்'லை அழுத்தினான்.

பதில் இல்லை.

'நான் யாருக்காக வாழ்கிறேன்... எதற்காக வாழ்கிறேன்.'



மீண்டும் 'செத்துப் போய்விடலாம்' என்ற எண்ணம் மனதுக்குள் எட்டிப் பார்த்தது.

திரும்பி பூட்டிக்கிடந்த கேட்டை நோக்கி நடந்தான்.

காதில் மோதியது பெண்ணின் இயல்பில்லாத சிரிப்பு.

'எங்கேயிருந்து வருகிறது... இது பெண்கள் இல்லாத வீடாயிற்றே...'

–பங்களாவைச் சுற்றிக்கொண்டு பின்னால் வந்தான்.

பூட்டியிருந்த 'அவுட் ஹவுஸ்'லிருந்து சிரிப்பு கசிந்துகொண்டிருந்தது.

'கதவைத் தட்டலாமா? வேண்டாம்... வேண்டாம்...'

அருகில் நின்ற வேப்பமரத்தில் ஏறி, 'வென்டிலேட்டர்' வழியாக எட்டிப் பார்த்தான்.

நாற்காலி ஒன்றில் சின்னதுரை அமர்ந்திருந்தான்.

அவனுக்கு நேர் எதிரில்–

நீலச்சேலை அணிந்த இளம்பெண் ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள்.

அவள்... அவள்...

மாரியப்பனின் தங்கை.

அவள் கண்களில் கெஞ்சல்... முகம் செத்துக்கிடந்தது.

"தொரை... ஒரே ஒரு மாத்திரை..." –கையேந்தி கேட்டாள் பரிதாபமாய்.

"மாத்திரைதான்... ஒன்று இல்லை. ஒன்பது... ஒன்பது தர்றேன். எல்லாத்தையும்... எல்லாத்தையும் அவிழ்த்திடு கண்ணு..."

"வேண்டாம் தொரை..." –என்றாள் கெஞ்சலாக.

நீலச்சேலையின் கண்கள் கலங்கியிருந்தன.

"என்ன கண்ணு... கடைசியா என்ன சொல்றே... உனக்கு மாத்திரை வேணுமா... வேண்டாமா?"

"வேணும் துரை... ஒண்ணே ஒண்ணு கொடு... நான் போயிடுறேன்."

"இது சரிவராது."

"என் தங்க வளையலை கழட்டி தர்றேன்" –என்றாள் அழுகை சுமந்த குரலில்.

துஷ்டத்தனமாய் சிரித்தான் சின்னதுரை.

"நான் கழற்றச் சொன்னது தங்கத்தை இல்லை. இந்த தந்த உடம்பை சுற்றியிருக்கிற துணிமணிகளை. கழற்றி கொடுத்திடும்மா க்ண்ணு... பாதி கழற்றினா ஒரே ஒரு மாத்திரை முழுசா கழற்றினா மூணு மாத்திரை..."

–அந்த இளம்பெண் தயக்கமாய் தன் சேலையை அவிழ்த்து சின்னதுரை கையில் கொடுத்தாள்.

அவள் மேனி நடுங்கியது, பயத்தில். கண்கள் தரை பார்த்தன.

சின்னதுரை கண்களில் காமம் வழிந்தது.

"ம்... கழற்று..." –விரல் சொடுக்கினான், அசிங்கமாய் சிரித்து.

அவள் தயக்கமாய் பாவாடையை கழற்ற எத்தனிக்க...

"தட்... தட்... தட்..."

–கதவு தட்டப்பட்டது... பலமாய்!

## 11

**விளக்கு ஒன்று அணைந்து போனால் வீடு மட்டும் இருள்கிறது. வீதி விளக்கு அணைந்து போனால் சாலை மட்டும் இருள்கிறது. மேற்கே சூரியன் மறைந்து போனால் பாதி உலகம் இருள்கிறது. பெத்த தாயவள் செத்துப்போனால் மொத்த உலகமும் இருள்கிறது.**

**–கவிஞர் வைரமுத்து.**

துடித்தது இதயம் கோபத்தில்!

'யாரவன் இந்த நேரத்தில்...' –எரிச்சலுடன் கதவைத் திறந்தான் சின்னதுரை.

வாசலில் நின்றுகொண்டிருந்தான் மதி.

"எதுக்காக இங்கே வந்தே... இங்கே அடிக்கடி வரக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன் இல்ல..."

"சின்னதொரை... அவ மாரியப்பன் தங்கச்சிடா..."



"தெரியும். நீ வெளியே போ..."

"டேய்... வேண்டாம்டா... அவ சின்ன பொண்ணு."

"வெளியே போ."

"பாவம்டா..."

"போ" –உச்சகுரலில் வெடித்தான் சின்னதுரை.

"ம்... ஒரு ஊசி."

"முதல்ல வெளியே போ."

"சின்னதொரை..." –கோபமாய் சின்னதுரையின் சட்டைகாலரை இறுக்கிப் பிடித்தான் மதி.

"மதி! மரியாதையா கையை எடுத்திடு... ரமா, இரு கொஞ்ச நேரத்தில வந்திடுறேன். ம்... வா. என் பின்னால."

–நாய்க்குட்டி போல பின்னால நடந்தான் மதி.

சுவரில் சரிந்து அழுத அக்காவின் முகம் நினைவில் வந்தது.

"மதி, 'அவுட் ஹவுஸ்'ல பார்த்தியா... போதை மாத்திரைக்காக காலேஜ் பொண்ணுங்க துணிகளை அவுத்து போடுறதை."

"நானும் அவுத்து போடவா...?" –சீற்றமாய் வந்தது கேள்வி மதியிடமிருந்து.

"ம்... நீ எதுக்காக வந்தே...?"

"ஒரே ஒரு ஊசி..."

"முதல்ல பணம். இரண்டாவது போதை."

"ஏய்..."

"பணம்."

"பணம் பணம்னு பறக்கிறியே... உனக்கு கொஞ்ச பணமா தந்திருக்கேன். நாலே நாள்தான் இருந்தது எங்க அக்கா கல்யாணத்துக்கு. கல்யாணம் நகை எல்லாத்தையும் திருடி உங்கிட்ட கொண்டுவந்து தரல்ல. ம்... பிளீஸ்... ஒரே ஒரு ஊசி..." –மதியின் குரல் கெஞ்சியது. விரல்கள் நடுங்கின.

"உன்னால பணம் தரமுடியாது. போதை வேணும் அப்பிடித்தானே?"

கோவில் மாடாய் தலையாட்டினான்.

"அதுக்கு நீ ஒண்ணு செய்யணும்" –சின்னக்குழந்தையாய் அவன் முகம் பார்த்தான்.

"செய்வியா...?"

“ம்... சொல்லு. செய்றேன்” –என்றான் மதி, சந்தேகம் தடவிய குரலில்.

“நாளைக்கு டிசம்பர் இருபத்தி நாலு. விடிஞ்சா...”

“டிசம்பர் இருபத்தைந்து” –சிரித்தான் கசப்பாய்.

“டிசம்பர் இருபத்தைந்து” –சிரித்தான் கசப்பாய்.

“கவனமா கேள். நாளைக்கு டிசம்பர் இருபத்தி நாலு. ராத்திரி எட்டு மணிக்கு நீ இங்கே வந்திடணும். விடிஞ்சா இருபத்திதஞ்சி. கிறிஸ்துமஸ். அன்றைக்கிதான் நீ அதை செய்யப்போறே” –என்று சொல்லிவிட்டு பேச்சை நிறுத்தினான் சின்னதுரை.

“என்ன செய்யப்போறேன்...?”

“துரோகம்.”

“துரோகமா...?”

“தேச துரோகம். ஆமாம். தாய்நாட்டுக்கு செய்ற துரேர்கம்”

“தேச துரோகம். ஆமாம். தாய்நாட்டுக்கு செய்ற துரேர்கம்”

–சின்னதுரை வாய் மூடாமல் பேசிக்கொண்டிருக்க...

மவுனமாய் கேட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான் மதி.

அவன் நடையில் உறுதி தெரிந்தது.

“டிசம்பர் இருபத்திநாலு. ராத்திரி கண்டிப்பா வர்றே...”

–உரத்த குரலில் கத்தினான் சின்னதுரை.

சுவர் ஏறி வெளியே குதித்தான் மதி.

குளிர்காற்றில் தினசரியின் ‘போஸ்டர்’ சடசடத்துக் கொண்டிருந்தது டீ கடையில்!

கருங்கல் ஒன்று அதன் மீது ஏறி இருந்தது.

நான்கைந்து பேர் சுற்றி அமர்ந்து, டீ உறிஞ்சிக்கொண்டு, அரசியல பேசின ாா்கள்.

அந்த டீக்கடை நோக்கி நடந்து வந்தான்.

ஒரே ஒரு பல்பு மட்டுமே டீ கடையில் எரிந்தது.

இருட்டை விரட்ட அந்த வெளிச்சம் போதுமானதாக இல்லை.

சட்டைபையைத் தடவினான். ஒரே ஒரு இரண்டு ரூபாய் நாணயம் மட்டுமே மீதமிருந்தது.

இதுதான் கடைசி டீ. பெஞ்சில் போய் அமர்ந்தான்.

“ஒரு டீ” –குரல் எங்கோ கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல் இருந்தது.



சடசடத்த தினசரியை கையில் எடுத்தான்.

பக்கம் பக்கமாய் புரட்டியவனை, எட்டாவது பக்கம் முகத்தில் அறைந்தது.

## ‘கல்யாண நகை திருட்டு. குடும்பத்தோடு விஷம் குடித்து ஆசிரியர் தற்கொலை’

–வரிவரியாய் படிக்க முடியாமல் திணறினான். கண்கள் இருட்டிக்கொண்டு வந்தன.

‘என்னுள் இருக்கும் மிருகம் என் குடும்பத்தையே தின்று தீர்த்துவிட்டதா? அம்மா... இந்த மதி இனி அநாதை. செத்தாலும் யாரும் அழமாட்டார்கள்... முத்துரெத்னா, நான் அநாதை...’

–எழுந்து அருகிலிருந்த பாழடைந்த கோவிலில் போய் படுத்தான்.

வானத்தில் நிறைய நட்சத்திரங்கள் முளைத்திருந்தன.

பின்னந்தலையில் மெலிதான வலி பரவ ஆரம்பித்திருந்தது.

‘இனி போதை வேண்டாம். செத்துப்போனாலும் வேண்டாம்.’

–மயக்கம் வரும்போல் உணர்ந்தான்.

அம்மா... அப்பா... அக்கா... வரிசையாய் வந்தார்கள் கையில் விஷம் ஏந்தி.

திரும்பி படுத்து கண்மூடினான். இமைகள் நனைந்திருந்தன.

முத்துரெத்னா கைகொட்டி சிரித்தாள்.

அரிவாளு ன் ஓடிவந்தார் முத்துரெத்னாவின் அப்பா.

நெஞ்சு கூட்டுக்குள் ரண வலி.

யாரோ தலையில் சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது.

கண்ணுக்குள் ஊசியால் குத்துவது போல் அவதி.

‘அம்மா... உன்னைக் கொன்னுட்டேனே அம்மா...’

திடீர் திடீரென்று யாரோ இதயத்தை கசக்குவது போல் மரண அவஸ்தை.

‘முடியாது... இனியும் என்னால் முடியாது’ –எழுந்து நின்று குதித்தது உள்ளேயிருந்த மிருகம்.

பேயைக் கண்ட குட்டிப் பிசாசு போல குதித்தான் சின்னதுரை.

"யா... வந்திட்டான்யா..." –உற்சாகமாய் கத்தினான்.

மதி அவர்களை நோக்கி சோர்வாய் நடந்து வந்து கொண்டிருந்தான்.

"நீ வருவேன்னு எனக்குத் தெரியும்... மதி நம்ம மூணு பேருக்கும் இந்த ராத்திரி ஒரு சின்ன வேலை இருக்குது" –என்றான் சின்னதுரை, குரலில் குழைவு காட்டி.

"சின்ன வேலை. பெரிய கூலி" –இருட்டில் பல் காட்டி சிரித்தான் கிருஷ்ணன்.

"முதல்ல ஊசி" என்றான் மதி உணர்ச்சியற்ற குரலில்.

சின்னதுரை தன் கையிலிருந்த லைட்டரை சுண்ட– அதன் தலையில் நீலம் கலந்த மஞ்சளில் தீ எரிந்தது.

"கிருஷ்ணா... மதிக்கு ஒரு சொர்க்கம் கொடு" –என்றான் சின்னதுரை வருடும் குரலில்.

கிருஷ்ணன் தன் சட்டைப்பைக்குள் இருந்து மஞ்சள்நிற திரவம் சுமந்த சிறிய கண்ணாடி பாட்டில் ஒன்றை வெளியில் எடுத்தான். அதன் ரப்பர் தலையில் ஊசி முனையை செருகி இழுக்க, பாட்டிலில் இருந்த திரவம் சிரிஞ்சிக்கு இடம் மாறியது.

அடுத்த நிமிடம்–

போதை திரவம் சுமக்கும் சிரிஞ்சியுடன், மதி அருகே வந்தான் கிருஷ்ணன்.

சட்டை விலக்கி, விரல்கள் மடக்கி, கையை நீட்டிய மதி, மூகம் திருப்பி நின்றான்.

"ம்... குத்தியாச்சா... நடந்துவாங்க இரண்டு பேரும் என் பின்னால..."

திரும்பி பார்க்காமல் கடற்கரை மணலில் கால் புதைய புதைய நடந்தான் சின்னதுரை.

விதிக்கப்பட்டதுபோல அவன் பின்னால் நடக்க ஆரம்பித்தான் கிருஷ்ணன்.

சில விநாடிகள் நின்று– தூரத்து இருட்டை வெறித்து பார்த்த மதி–



இருவரையும் பின்தொடர்ந்தான்– காத்திருக்கும் விபரீதம் அறியாமல்.

காலடிகளை உள் வாங்கியது கடற்கரை மணல்.

நேற்று பெய்த மழையின் ஈரம் இன்னும் மீதமிருந்தது.

முன்னால் நடந்தவர்களுக்கு ஈடுகொடுக்கும் விதமாக வேக நடை நடந்தான்.

நடந்தார்கள்... நடந்தார்கள்... நடந்துகொண்டே இருந்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் சோர்ந்துபோனான் உடலும், மனமும் ஒரு சேர!

வியர்த்தும் போயிருந்தான்.

அண்ணார்ந்து வானம் பார்த்தான்– சின்னகுழந்தையாய் விலகி விலகி ஓடிக்கொண்டிருந்தது மஞ்சள் நிலவு.

போலீஸ் வேடத்தில் துண்டு மேகங்கள் துரத்திச் செல்வது போலிருந்தது.

யாரோ கிழித்து போட்டதுபோல தோற்றம் தந்தது கறுப்பு வானம்.

நட்சத்திரங்கள் கண் இமைத்துக்கொண்டிருந்தன–கண்ணீரில் நனைத்த இமைகளாய்.

'ராஜா மக கத்திகிட்டு போறா, அழைக்க நாதியில்லை. தபால் பையி பிஞ்சி கிடக்கு. தைக்க நாதியில்லை. மல்லிகைப்பூ சிந்திக் கெடக்கு. பெறக்க நாதியில்லை' –தாத்தா சொன்ன விடுகதை நினைவில் வந்து மோதியது.

பெருமூச்சொன்று மார்பை தாலாட்டியது.

கடல் அலைகள் ஓடி ஓடி வந்து கரையைத் தொட்டு திரும்பி சென்றுகொண்டிருந்தது.

சோர்வில்லாமல் அலைகளின் சத்தம் இரவின் அமைதியை கிழித்தது.

சிந்தனை கலைந்து நிமிர்ந்து பார்த்தான்.

இருவரும் தூரமாய் போயிருந்தார்கள்.

வேக நடை நடந்தான்.

சில நிமிடங்களில் அவர்களை நெருங்கியிருந்தான்.

ஈர மணலில் சின்னதுரையின் காலடிகள் அழுத்த பதிவுகளை ஏற்படுத்தியிருந்தன.

அந்தக் கால் பதிவுகள் மீது கால் பதித்து நடக்க ஆரம்பித்தான் மதி.

தலை அவனை அறியாமலே குளிர்ந்தது.

கண்கள் தரையைத் தடவின.

'சின்னவயதில் பார்த்த பாட்டியின் தாமிரபரணி கரையோர கிராமமும், பூமாலை கழுத்தில் சுமந்து– சாமியாடியின் பின்னால் நடந்துபோகிற வெள்ளாட்டு கிடாவும்.'

ஏனோ அந்த நிமிடம் கண்முன் வந்தது நிழல் படமாய்.

உதடுகளை புன்னகை அசைத்தது.

அடுத்த இமை மூடும்பொழுதே–

இருட்டில் தொலைந்துபோனது அந்தப் புன்னகை.

## 12

**பாதையில் சிலபேர்– அரக்கர்களாகிவிடுகிறார்கள். சிலபேர்– குழந்தைகளாகிவிடுகிறார்கள். குழந்தைகளை– எப்படியும் பயன்படுத்தலாம்.**

**–கவிஞர் கண்ணதாசன்.**

மண்ணில் கால் மிதிக்காமல் மிதந்து போவதுபோல் மதியின் மனதுககுபட்டது.

உள்ளே புகுந்திருந்த போதை மேனியை மேகமாக்கி இருந்தது. 'எங்கே நடந்துபோகிறோம்...' என்று தனக்குத்தானே ஒருமுறை கேள்வி கேட்டுக்கொண்டான். நடையில் தயக்கம் பிறந்தது. அரிவாள் சுமந்த சாமியாடி... பூமாலை அணிந்த ஆடு... மீண்டும் நினைவுக்கு வந்தது.

அதே நேரம் எஸ்தர் டீச்சர் மனப்பாடம் செய்யச் சொன்ன பைபிள் வரிகள் வரிவரியாய்...

'ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வது போலும். ஒரு மூடன்



விலங்கிடப்பட்டு தண்டனைக்கு போவது போலும். ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத்தி விரிக்கிறது போலும். அவனுக்கு பின்னே போனான். அம்பு அவன் ஈரலை பிளந்தது.'

'இந்த நிமிடம் ஏன் இந்த வரிகள் நினைவுக்கு வரவேண்டும்? எனக்கு என்ன நடக்கிறது?'

எதுவும் பேசாமல் சின்னதுரை பின்னால் நடந்து கொண்டிருந்தான் மதி.

கிருஷ்ணனும் வாய் திறக்கவில்லை. சின்னதுரை நடையில் ஏதோ குறி இருந்தது.

மூவருமே மவுனத்தின் பிடியில் சிக்கியிருந்தார்கள்.

நடை மட்டுமே நோக்கமாயிருந்தது.

நடந்தார்கள்... நடந்தார்கள்... நடந்துகொண்டே இருந்தார்கள்...

எதிர்பாராத தருணத்தில் சட்டென்று பாதையிலிருந்து விலகி– அருகிலிருந்த புதரை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான் சின்னதுரை.

சில விநாடிகள் எதையோ உற்றுப் பாரத்தான. உறுதி செய்துகொண்டவன் தலையை ஒருமுறை ஆட்டினான் மேலும் கீழும்.

அடுத்த இமை மூடுபொழுது–

கையிலிருந்த மண்வெட்டியால் தரையை வெட்டத் தொடங்கினான் வேகமாய்.

அந்த செயல் மதிக்கு வியப்பாய் இருந்தது.

கண் இமைக்கால் பார்த்துக்கொண்டு நின்றான் சின்னக்குழந்தையாய்.

"ம்... லைட்டர்" –என்றான் சின்னதுரை சத்தமாய்.

காதுக்குள் யாரோ கிசுகிசுப்பாய் பேசுவது போல இருந்தது மதிக்கு.

கிருஷ்ணன் தன் கையிலிருந்த லைட்டரை சுண்ட–

நெருப்பின் நீள் நாக்கு தலை தூக்கி வெளிச்சம் தந்தது.

அந்த வெளிச்சத்தில்–

சின்னதுரை மண்ணை இடுப்பளவு தோண்டியிருப்பது தெரிந்தது.

கையிலிருந்த மண்வெட்டியை வீசிவிட்டு–

குனிந்து இரண்டு கைகளாலும் மண்ணை பரட் பரட்டென்று தோண்டத் தொடங்கினான்.

அடுத்த நிமிடத்தில்–

பெரிய சூட்கேஸ் ஒன்று கண்ணுக்கு தெரிந்தது.

அதைச் சுற்றி மூடியிருந்த மண்ணை அகழ்ந்து– அப்படியே சூட்கேஸை தூக்கி வெளியில் வைத்தான் சின்னதுரை.

பெட்டியில் ஈர மண் ஒட்டியிருந்தது.

சிறிய பூட்டு ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது.

பேன்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு சாவிக் கொத்தை எடுத்து– அதிலிருந்து சாவி ஒன்றை தேர்ந்தெடுத்து பூட்டை நிதானமாய் திறந்தான்.

வெடிமருந்து நெடி நாசியைத் தொட்டது.

மதியை அதிர்ச்சி தாக்கிற்று.

திறந்திருந்த சூட்கேஸில் ஜெலட்டின் குச்சிகளும், பெல்லட் ஊசிகளும், வெடிகுண்டுகளும், டைம் செட்டர்களும், வயர்களும், துண்டுதுண்டாய் கறுப்பு சதுரங்களும்– ரிமோட்கண்ட்ரோல்களும், பேட்டரிகளும்... ஒன்றின் மீது ஒன்றாய்...

மதி மனதுக்குள் மீண்டும் கவிதை புரண்டது.

**'அன்று**
**மொஹஞ்சதாரோ ஹரப்பா**
**தோண்டி தோண்டி எடுத்தோம்**
**நம் நாகரீகம்.**
**இன்று**
**மொகஞ் சிதற அப்பப்பா**
**தோண்டி தோண்டி எடுக்கிறோம்**
**வெடிகுண்டுகள்...'**

சட்டென்று வார்த்தைகள் அறுந்தது.

கண்முன் நாசகார சாத்தான் சுமந்த சூட்கேஸ் தெரிந்தது.



"எதுக்கு இதெல்லாம்...?" –என்று கேட்டான் மதி நடுக்கமாய்.

"கொஞ்சம் பொறு. ரெண்டு 'பாம்' தயார் பண்ணிட்டு சொல்றேன்" –என்றான் சின்னதுரை நமட்டுச் சிரிப்புடன்.

பெட்டிக்குள் இருந்து ஒரு வெடிகுண்டை எடுத்து, 'ரிமோட் சென்சார்' இணைத்து– மதியை நோக்கி நீட்டினான். அதை கையில் வாங்குவதற்கு அவனுக்கு தயக்கமாயிருந்தது.

கையிலிருந்தே வெடித்துவிடுமோ என்று பயமாகவும் இருந்தது.

"பிடிச்சி தொலைடா– வெடிக்காது. நீ செத்தாலும் உனக்காக அழுறதுக்கு யாருடா இருக்கா–?"

பூப்பந்தை வாங்குவதுபோல வெடிகுண்டை கையில் வாங்கிக்கொண்டான் மதி.

விரல்கள் மெலிதாக நடுங்கின. அவசரமாய் பிறந்தன வியர்வைத் துளிகள்.

'கையிலிருந்து நழுவி விழுந்துவிடுமோ?' என்ற புதிய கவலை வந்திருந்தது.

'ரிமோட்கண்ட்ரோல்' ஒன்றை எடுத்து இடுப்பில் செருகிக்கொண்டான் சின்னதுரை.

அடுத்து சூட்கேஸை பூட்டி குழிக்குள் இறக்கி, மண்ணால் மூடினான்– அவசர அவசரமாய்.

பேண்ட்டும், சட்டையும் தெப்பலாய் நனைந்து போயிருந்தன.

"உன் கையில் இருக்கிறது எதுக்குன்னு கேட்டே இலல–?"

பயம் கலந்த ஆர்வத்துடன் அமைதியாய் தலையை ஆட்டினான் மதி.

"நாலு ரோடு சந்திப்பு கோவிலை சிதற வைக்கிறதுக்கு" –என்று சொல்லிவிட்டு வாய் திறந்து சிரித்தான் சின்னதுரை.

திசை தப்பி போயிருந்த பற்கள் லைட்டரின் மஞ்சள் ஒளியில் பயமுறுத்திற்று.

"நாளைக்கு விடிகாலை மூன்றரை மணிக்கு நீதான்

இந்த வெடிகுண்டை முதல் ஆளா போயி கோவிலுக்குள்ள வைக்கப்போறே..."

"நா...நானா...?"

"சாட்சாத் நீயேதான்."

"எ...எதுக்கு கோவிலை..."

"மதி- மசூதி இடிஞ்சதால முஸ்லிம்- இந்து பகை வந்தாச்சு. சர்ச்சை இடிச்சா இந்து- கிறிஸ்தவர் பகை வந்திடும். இந்தியா ஒரு நாள் துண்டு துண்டா போயிடும். இதுக்கு யாரோ யாருக்கோ விலை கொடுக்கிறாங்க. எனக்கு தரப்பட்ட விலை இருபது லட்சம். உனக்கு... நீ நினைக்கிற நேரமெல்லாம் மேகத்தில் மிதக்கலாம். வானத்தில் பறக்கலாம். நீ செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். உன் கையில இருக்கிற வெடிகுண்டை 'சர்ச்'சுக்குள்ள வைக்கணும். நான் 'ரிமோட் கண்ட்ரோ'லை இயக்கி வெடிக்க வைப்பேன்."

–எந்தவித பதிலும் சொல்லாமல் அசைவற்று நின்றான் மதி திகிலுடன்.

**'பாதகஞ் செய்பவரைக் கண்டால்- நாம்**
**பயங்கொள்ள லாகாது பாப்பா.**
**மோதி மிதித்து விடு பாப்பா- அவர்**
**முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா...'**


–தமிழ் வாத்தியார் குரல் காதில் மோதியது.

"என்னடா... பேய் அடிச்சிட்டா... மூக்கிலயிருந்து ரத்தம் வருதா பாரு... பேச்சு மூச்சையே காணோம்... ஏய் மதி..."

"இ...இல்லடா... அது... வந்து... நம்ம தேசத்துக்கு..."

"பொல்லாத தேசம்... நான் பட்டினியா கிடந்தபோது இந்தத் தேசம் வந்து சோறு போட்டுச்சா... கிருஷ்ணன் அம்மா மருந்து-மாத்திரை வாங்க காசில்லாமல் செத்துப் போனபோது இந்தத் தேசம் உதவிக்கு ஓடிவந்திச்சா? இல்லை உனக்கு போதை ஊசிக்கு பணம் தேவைப்பட்ட நேரம் பணத்தைக் கொண்டுவந்து கொட்டிச்சா? உனக்கு உதவாத இந்தத் தேசத்தை நீ ஏன் கட்டிப்பிடிச்சிகிட்டு அழுறே? தொடர்ந்து உனக்கு போதை வேணும்னா இந்த ஒரே ஒருமுறை நான் சொல்றதைக் கேள்.





அதுபோதும்..."

–நடுங்கும் விரல்களால் கையிலிருந்த வெடிகுண்டை இறுகப் பற்றிக்கொண்டான், மதி.

அன்று முத்துரெத்னா தன் கையை இறுகப் பிடித்தது நினைவில் வந்தது.

மழை மேகத்துக்கு பின்னால் ஒளிந்திருந்தது மஞ்சள் நிலவு– யாருக்கோ பயந்தது போல.

மேகத்தின் பிடியிலிருந்து தப்பியிருந்த ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் பயத்துடன் கண் இமைத்தன– ஏதோ அபாயம் என்பதுபோல. ஜில்லென்று வீசியது மார்கழி மாதத்து குளிர்காற்று.

கம்பீரமாய் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தது அந்த மாதா கோவில்.

அந்தக் கோவிலுக்கு நூறு மீட்டர் தொலைவில் பூமரம் ஒன்று நின்றது.

அதனடியில் ஒன்றுமறியா பூனைக்குட்டி போல பதுங்கலாய் வந்து, சுழன்று திரும்பி நின்றது. ரத்தச் சிவப்பில் கார் ஒன்று.

காருக்குள் சின்னதுரை, கிருஷ்ணன், மதி.

"ம்... என்னால தாங்க முடியல்ல... கிருஷ்... ம்... சீக்கிரம் குத்தித் தொலை."

சட்டை கையைச் சுருட்டி, விரல் மடக்கி– கையை நீட்டினான், மதி.

வலியில் முகம் சுருக்கினான்.

"ம்... போ... பிரார்த்தனை செய்வதுபோல் பாசாங்கு செய். பிரார்த்தனை முடிந்ததும் பீடத்தை நெருங்கு. மெழுகுவர்த்தி ஏற்றுவது போல் நடி. அந்த இடத்தில் அப்படியே 'பாமை' விட்டுவிட்டு வந்துவிடு. ம்... புரிந்ததா?"

–சின்னதுரையை எரிச்சலுடன் திரும்பி பார்த்தான் மதி.

'ஜிவுஜிவு'வென்று ரத்தம் சூடேறுவது உணர்ந்தான்.

மவுனமாய் காரைவிட்டு இறங்கினான்.

வானம் மெலிதாய் தூறத் தொடங்கியிருந்தது அழுகையின்



ஆரம்பம்போல.

காற்று ஈரத்தை அள்ளி விசிறிக்கொண்டிருந்தது.

"வெடிகுண்டை வைத்துவிட்டுநீவந்ததும்ரிமோட்கண்ட்ரோலை அழுத்திவிட்டு காரில் ஏறி நாம் தப்பிவிடலாம்... ம்... சீக்கிரம்..."

–அவனுக்குஎந்தவிதபதிலும்சொல்லாமல்முடுக்கிவிடப்பட்ட பொம்மை போல முகத்தில் சலனமின்றி கோவிலை நோக்கி நடக்க ஆரம்பித்தான் மதி.

இடுப்பில் தூங்கிக்கொண்டிருந்தது வெடிகுண்டு.

அமைதியாய் நடந்தான் இமை மூடாமல்.

வேப்பமரத்து பள்ளிக்கூடத்து தர்மராஜ் வாத்தியார்– கனத்த குரலில் சத்தமாய் பாடுவது தூரத்தில் கேட்பது போலிருந்தது.

"ஜன... கன... மன..."

–இதயத்தில் வியப்பு பரவியது.

திரும்பி பார்த்தான், தயக்கத்துடன்.

சின்னதுரையும், கிருஷ்ணனும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

இடுப்பை ஒருமுறை தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

அபாயம் அமைதியாய் இருந்தது.

கோவில் வாசலை நோக்கி நடந்தான்– நிதானமாய்.

தூரத்தில் நின்று அம்மா அழைத்தாள் 'வா வா' என்று.

காதுக்குள் முத்துரெத்னாவின் குரல் கிசுகிசுத்தது.

நத்தையாய் நகர்ந்து கோவிலை தொட்டிருந்தான்.

பெரிய மணியொன்று அசைவின்றி தொங்கிக்கொண்டிருந்தது அந்தரத்தில்.

கயிறு மட்டும் காற்றில் அசைந்தாடியது.

'இந்த மணி கழன்று... என் தலையில் விழுந்து...'

–உதடுகளை புன்னகை அசைத்தது.

வரிசையாய் மேல் நோக்கி படிகள்.

ஒவ்வொரு படியாய் ஏறினான், சிரமமாய்.

அவனுக்கோ காற்றில் மிதப்பதுபோல் இருந்தது.

அம்மாவின் அழகு முகம் கண்முன் வந்தது.

கிணற்று நீச்சலில் பயத்துடன் அம்மாவை கட்டிப் பிடித்துக்கொண்டது நினைவில் வந்தது.

முதுகை இரண்டு கண்கள் உற்றுப் பார்ப்பது போலிருந்தது.

அக்காவின் கண்ணீர் கண்களாக இருக்குமோ?

திரும்பிப் பார்க்க பயமாயிருந்தது.

அதே விநாடி– சிரிக்க வேண்டும் போலவும் தோன்றியது மதிக்கு.

வாய்விட்டு அழலாமா என்று யோசித்தான், அதற்கு அடுத்த இமை மூடுபொழுதே... யாரோ தன்னோடு நடந்து வருவதுபோல் உணர்ந்தான்.

சற்றும் முற்றும் பார்த்தான்.

யாருமில்லை.

பூமியை இருட்டு இன்னும் அழுத்தமாய் பிடித்திருந்தது.

மீண்டும் நிதானமாய் படிகளில் ஏறத் தொடங்கினான்.

கம்பை படிகளில் ஊன்றி, யாரோ பின்னால் நடந்து வரும் ஒலி கேட்டது.

சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தான்.

வயதான தாத்தா ஒருவர் தெரிந்தார்.

அவனுக்கோ– பொக்கைச் சிரிப்புடன் காந்தியின் முகம் நிழலாடியது.

கையில் கம்பு.

'இவர்... இவர்... காந்தி தாத்தாதானே?'

காந்தி தாத்தாதான்...

அதே பெரிய காது...

நீண்ட கரங்கள்...

'ஏன் இப்படி சிரிக்கிறார்...?'

அவசர அவசரமாய்–

படிகளில் தாவி ஏறி முதல் படிக்கு வந்திருந்தான்.



எதிரில்–

மாதாவின் திருஉருவச்சிலை.

கையில் குழந்தை இயேசு.

அந்தப் புன்னகை... அந்த அழகான புன்னகை...

"என்னால் முடியாது... என்னால் முடியாது... தான் இதைச் செய்யமாட்டேன்... நான் நிச்சயம் செய்யமாட்டேன்."

–பைத்தியம் போல கத்திக்கொண்டே படிகளில் இறங்கினான் வேகமாய்.

பின்னாலிருந்து முத்துரெத்னா சிரிக்கிற சத்தம் கேட்கிறது.

பதற்றத்தில் கால் தடுமாறி... இடற...

தலைகீழாய் படிகளில் விழுந்து உருண்டு...

மோதி தரை தொட்டு, ரத்தம் கசிய எழுந்து நின்றான் மதி.

எதிரில் நடந்து வந்துகொண்டிருந்தார் பாதிரியார்.

"என்னை அப்படி பார்க்காதீங்க பாதர். நான் சத்தியமா அந்தக் காரியத்தை செய்யமாட்டேன்... என்னை நம்புங்க பாதர்... என்னை நம்புங்க..."

–மதி கத்திக்கொண்டே ரத்தச் சிவப்பான காரை நோக்கி ஓட...

படியேறிய முதியவரும், பாதிரியாரும் எதுவும் புரியாமல் திகைத்துப்போய் நிற்க...

பதற்றமாய் ரிமோட்கண்ட்ரோலை அழுத்துகிறான் சின்னதுரை.

மதி நான்காய், எட்டாய், பதினாறாய்... சிதறி...

**(முடிந்தது)**

ராணிசிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.